
விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii




பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 10 வெள்ளிக்கிழமை (23.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 156

### ★ கொலைச் சம்பவங்களின் எதிரொலி ★

# காத்தான்குடியில் வன்முறை அபாயம் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பதற்றம்

### பொலிஸ் ஊரடங்கு அமுல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேசங்களில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வெவ்வேறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின்போது தமிழ்மக்கள் விடுத லைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த 2 பேரும் 3 முஸ்லிம்களும் என 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

குறித்த துப்பாக்கிச் சூடு மற்றும் வன்முறைச் சம்பவங்களின் போது மேலும் 10 பேர் வரை காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவங்களையடுத்து தமிழ்-முஸ்லிம் மக்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தப் பிரதேசங்களில் பாதுகாப்புப் பலப்படுத் தப்பட்டுள்ளதோடு பொலிஸ் ஊரடங்குச் சட்டமும் பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி பிரிகேடியர் பால்ராஜுக்கு தலைவர் வே.பிரபாகரன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## இமாலய வெற்றிகள் பலவற்றுக்கு நடுநாயகமானவர் பிரிகேடியர் பால்ராஜ்

### தலைவர் பிரபா புகழாரம்

(கிளிநொச்சி)

இமாலய வெற்றிகள் பலவற்றுக்கு நடு நாயகமாக நின்று செயற்பட்டவர் பிரிகேடியர் பால்ராஜ் என்று தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு,

விடுதலைக்கான நீண்ட பயணத்திலே எமது சுதந்திர இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கின்றது. எத்தனையோ வீர காவியங்களைப் படைத்திருக்கின்றது. எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்றது. மகத்தான இராணுவ வெற்றிகளைக் குவித்திருக்கின்றது. இந்த இமாலய வெற்றிகள் பல (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் மீது மன்னாரில் துப்பாக்கிச் சூடு

(மன்னார்)

மன்னார் பஸ் தரிப்பிடத்தில் வைத்து ஈ.பி.டி.பியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

மன்னாரிலுள்ள ஈ.பி.டி.பி. கட்சியின் முக்கிய உறுப்பினரான மோகன் என்றழைக்கப்படுபவரே துப்பாக்கிச் சூட்டுக்கு நேற்று மாலை 5.45 மணியளவில் இலக்காகியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படுகாயமடைந்த நிலையில் அவரைப் படையினர் மன்னார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தையடுத்து மன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய நாடுகள் தேர்தலில் தோல்வியடைந்தமை விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்த வெற்றியல்ல

### அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவைக்குப் புதிய உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்வதற்காக நியூயோர்க்கில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நாடாக இலங்கையை 101 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

இது எமக்குக் கிடைத்த பாரிய தோல்வியல்ல என்று வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்தார். புலிகளுக்குச் சார்பான அமைப்புகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் அழுத்தங்களுக்கு மத்தியில் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்தே நாம் இந்தத் தேர்தலில் போட்டியிட்டோம்.

இந்தத் தேர்தலில் 101 வாக்குகளைப் பெற்று நாம் தோல்வியடைந்தமை புலிகளுக்குக் கிடைத்த வெற்றியல்ல என்றும் அவர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் மீது வழக்குத் தொடர சர்வதேச நீதிமன்றில் மகஜர் கையளிப்பு

(கொழும்பு)

நெதர்லாந்தின் த ஹேக் நகரிலுள்ள சேர்பிய அதிபர் மிலோசவிச் போன்ற உலகப் போர்க் குற்றவாளிகளை விசாரணை செய்த சர்வதேச நீதிமன்றத்தில் மகிந்த அரசின் மீது வழக்குத் தொடர தகுந்த போர்க்குற்ற ஆதாரங்களுடன் மகஜர் ஒன்று சர்வதேச, காணாமல் போதலிற்கு எதிரான அமைப்பினால் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பெற்றுக் கொண்ட இவ் நீதிமன்றத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ் வழக்கினைத் தொடருகின்ற வகையில் இந் நீதி மன்றின் வழக்கறிஞர்கள் சபையிடம் கையளிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

இதன்போது சில தமிழ் மக்களும் சில வெளிநாட்டவர்களும் இம் மன்றின் முன் ஒன்று கூடி மகிந்த அரசினால் படுகொலை செய்யப்பட்டவர்களின் படங்களையும் பதாகைகளையும் தாங்கியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தினையும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் நேற்று கிளைமோர்த் தாக்குதல்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் நேற்று முற்பகல் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அக்கரைப்பற்று கோளாவி என்ற இடத்தில் நேற்று முற்பகல் 10.15 மணியளவில் இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீதி சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்ட படையினரை இலக்கு வைத்து (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரை இறுதியில் நுழைந்த ராஜஸ்தான்-பஞ்சாப் மற்றைய இரு அணிகளுக்கு கடும் பலப்பரீட்சை

(சென்னை)

ஐ.பி.எல் இருபது -20 கிரிக்கெட் போட்டியில் மொத்தம் உள்ள 56 லீக் ஆட்டத்தில் நேற்றுடன் 47 போட்டிகள் முடிபடைந்து விட்டன.

இதில் வோர்னின் ராஜஸ்தான் றோயல்ஸ் 18 புள்ளிகளைப் பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்று விட்டது. அந்த அணிக்கு என்னும் மூன்று ஆட்டங்கள் உள்ளன.

யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 16 புள்ளிகளைப் பெற்று அரையிறுதிக்கு இரண்டாவது அணியாக முன்னேறியுள்ளது. அந்த அணிக்கும் மூன்று ஆட்டங்கள் எஞ்சியுள்ளது.

அரையிறுதியுள் நுழைய மற்றைய இரண்டு அணிகள் யார் நுழையலாம் என மூன்று அணிகளிடையே கடும் போட்டி நிலவுகிறது.

### சென்னை சுப்பர் கிங்ஸ்

தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் 14 புள்ளியுடன் உள்ளது. இன்னும் இரண்டு ஆட்டம் எஞ்சியுள்ளது. நாளை ராஜஸ்தான் றோயலையும் 27ஆம் திகதி ஐதராபாத் டெக்கான் சார்ஜர்சையும் எதிர்கொள்கிறது.

இதில் ஒரு ஆட்டத்தில் வென்றால் அரையிறுதி வாய்ப்பை பெறலாம். ஆனால் இரண்டு அணிகளிடமுமே முதல் சுற்றில் சென்னை அணி ஏற்கனவே தோல்வி அடைந்தது மேலும் ஓட்டவிகித சராசரியில் மறைப் பெறுமதியில் உள்ளது.

அரையிறுதியில் நுழைய கடுமையாகப் போராடவேண்டும்.

### மும்பை இந்தியன்ஸ்

டெண்டுல்கரின் மும்பை இந்தியன்ஸ் 12 புள்ளிகளுடன் உள்ளது. மூன்று ஆட்டம் எஞ்சியிருக்கிறது.

நாளை டெல்லியையும் 26ஆம் திகதி ராஜஸ்தான் றோயல்லையும் 28ஆம் திகதி பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்சையும் எதிர்கொள்கிறது. இதில் இரண்டில் வென்றால் அரையிறுதி வாய்ப்பை பெறும்.

### டில்லி டேர் டேவில்ஸ்

சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணி நேற்றிரவு நடைபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் போட்டி ரத்தானமையினால் ஒரு புள்ளியை மாத்திரம் எடுத்து தொடரில் 13 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இதனால் அரையிறுதிக்கு அந்த அணி நுழைவதற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

எஞ்சியுள்ள ஒரு போட்டியில் டில்லி டேர் டேவில்ஸ் அணி நாளை மும்பை இந்தியன்ஸ் அணியுடன் மோதுகின்றது.

இப்போட்டியில் வெற்றி பெறுவதுடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இனிவரும் இரு போட்டிகளிலும் தோல்வி அடையும் சந்தர்ப்பத்திலேயே அரையிறுதி வாய்ப்பை பெற முடியும்.

அல்லாவிடின் நாளைய போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியை வெற்றி பெறுவதுடன் மும்பை இந்தியன்ஸ் அணி அடுத்து விளையாடும் இரு போட்டிகளிலும் தோல்வி அடைகின்ற சந்தர்ப்பத்திலேயே அரையிறுதிக்கு டில்லி டேர் டேவில்ஸ் அணி நுழைய முடியும்.

இதனால் இனிவரும் போட்டிகளில் டில்லி -மும்பை, ராஜஸ்தான் - மும்பை, சென்னை - ராஜஸ்தான் ஆட்டங்கள் முக்கியமாக இருக்கும். (5)

## ஆஸி.சிறப்பான ஆரம்பம்

பொன்டிங் -ஹஸி சிறப்பான இணைப் பாட்டத்தால் அவுஸ்திரேலிய அணி சரிவிலிருந்து மீண்டது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று துடுப்பெடுத்தாடிவரும் அவுஸ்திரேலிய அணி நேற்றைய முதல்நாள்ஆட்ட தேநீர் இடைவேளைக்கு முன்பு 2 விக்கெட்டுக்களையிழந்து 129 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் ஆட்டமிழக்காமல் பொன்டிங் 68, ஹஸி 34 ஓட்டங்களை எடுத்திருந்தனர். பந்து வீச்சில் எட்வொட்ஸ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (5)

## தோல்வி என் மனதை உண்மையிலேயே பாதித்தது

### டெண்டுல்கர் வேதனை



(மும்பை)

ஐ.பி.எல் இருபதுக்கு -20கிரிக்கெட் தொடரில் மும்பையில் நேற்று முன்தினம் நடந்த திரிலான ஆட்டத்தில் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி ஒரு ஓட்டத்தால் மும்பையை வென்றது.

தோல்வி குறித்து மும்பை அணியின் தலைவர் டெண்டுல்கர் நிருபர்களிடம் கூறியதாவது,

இந்தத் தோல்வி என் .மனதை உண்மையிலேயே பாதித்துள்ளது. 2 ரன் அவுடால் 2 ஓட்டங்களை இழந்து விட்டோம்.

190 ஓட்டங்களை பகிர்ந்து ஆடுவது சாதாரணமானதல்ல. ஆனால் தொடக்கத்திலிருந்தே சிறப்பாக ஆடிய 5 பந்து எஞ்சிய நிலையில் வெற்றி பெறுவோம் என்று நினைத்தேன்.

தோல்விக்குக் காரணத்தை சொல்லி தப்பிக்கவில்லை. நடுவரின் முடிபு குறித்து நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. உலகமே பார்த்துக்கொண்டிருந்தது. அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியும் இவ்வாறு அவர் கூறினார்.

## மழை காரணமாக டில்லி -கொல்கத்தா ஆட்டம் இரத்தானது

(டில்லி)

டில்லி டேர் டேவில்ஸ் அணிக்கும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கும் இடையில் நேற்றிரவு நடைபெறவிருந்த ஆட்டம் மழை காரணமாக இரத்தானது.

ஐ.பி.எல் தொடரில் நேற்றிரவு டில்லியில் நடைபெறவிருந்த லீக் சுற்றின் 47-வது ஆட்டத்தில் சேவாக் தலைமையிலான டேர் டேவில்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதவிருந்தன.

இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்பிருந்தே மழை பெய்தமையினால் ஆட்டம் ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் இரத்துச் செய்யப்பட்டதுடன் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

ஐ.பி.எல் தொடரில் மழையால் இரத்தாகும் முதலாவது ஆட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (5)

## இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(ஓல்ட் ராவோட்)

இங்கிலாந்து -நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 2-வது டெஸ்ட் இன்று ஓல்ட் ராவோட்டில் ஆரம்பமாகின்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இத் தொடரில் கடந்த வாரம் லோட்ஸில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிபுற்ற நிலையில் 2-வது டெஸ்ட் இன்று ஆரம்பமாகின்றது.

(5)

## இன்னொரு நெருப்பு புகைகிறது!

(கொல்கத்தா)

கடந்த செவ்வாய்க்கிழமை ஈடன் கார்டன் மைதானத்தில் கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி மோதியது. போட்டி ஆரம்பமாகும் முன் ராஜஸ்தான் அணியின் தலைவர் ஷேர்ன் வோர்ன் சிகரெட் பிடித்த சர்ச்சை விஸ்வ ரூபம் எடுத்துள்ளது.

பொது இடங்களில் புகை பிடிக்கக்கூடாது என்று தடை உள்ளது. இதை மீறியுள்ள அவர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்தால் தண்டிக்கப்படுவாரா என்ற கேள்விக் குறி எழுந்துள்ளது.

2000ஆம் ஆண்டில் இதேபோன்ற சர்ச்சையில் அவர் சிக்கினார். 1998ஆம் ஆண்டில் இதற்காக அவர் அபராதமும் கட்டினார். (5)

# கங்குலிக்கு வில்லனாகிறார் ஷாருக்கான்!

## இந்தியன் பிரிமியர் லீக்கில்

(கொல்கத்தா)

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளர் ஷாருக்கான் மற்றும் அணித் தலைவர் சௌரவ் கங்குலிக்கு இடையில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இரண்டு ஹீரோக்களாக அணியில் காட்சியளித்த இவர்கள் தற்போது எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளால் விரிசல் ஏற்பட்டு இரு துருவங்களாகியுள்ளனர்.

ஐ.பி.எல். போட்டிகளில் கங்குலி திறமையை வெளிப்படுத்தத் தவறியதும் புள்ளிப் பட்டியலில் கொல்கத்தா அணி ஆறாம் இடத்திற்கு தள்ளப்பட்டு அரையிறுதி வாய்ப்பை இழந்திருப்பதுமே தற்போது இருவருக்குமிடையில் விரிசல் முற்றியதற்கு காரணம் என்கிறார்கள் அணியினர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியுடன் ஈடன்கார்டன் மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த போட்டியில் கொல்கத்தா அணி தோல்வியடைந்தது. இந்தப் போட்டியில் கங்குலி 32 ஓட்டங்கள் எடுத்திருந்த போதிலும் அணியின் தோல்விக்கு கங்குலி தான் காரணம் என ஷாருக்கான் எண்ணினார்.

ஏலம் எடுத்தது முதலே கங்குலியின் எண்ணப்படி ஷாருக்கான் நடக்காததால் இருவருக்குமிடையில் புகைச்சல் ஆரம்பித்தது. அணியில் அதிக துடுப்பாட்ட வீரர்கள் அதிகமாக இருக்க வேண்டுமென்று கங்குலி விரும்பினார். ஆனால் பந்து வீச்சாளர்கள் அதிகமாக இருக்க வேண்டுமென்று ஷாருக்கான் விரும்பினார். அடம் கில்கிறிஸ்ட் விக்கெட் காப்பாளராக வேண்டுமென்று கங்குலி கூறியபோது புகானனின் பேச்சை மட்டுமே கேட்ட ஷாருக்கான், கங்குலியின் விருப்பத்தை நிறைவேற்றவில்லை.நீறுபூத்த நெருப்பாக இருந்த பிரச்சினைகள் அனைத்தும் அரையிறுதிக்குள் அணி நுழையவில்லை என்று தெரிந்து விட்டதால் தற்போது வெளிச்சத்துக்கு வரத்தொடங்கிவிட்டன.

இருவருக்குமிடையில் அணித்தேர்வு, வீரர்களின் துடுப்பாட்டவரிசை உள்ளிட்ட விடயங்களிலும் கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தன. இவற்றையெல்லாம் விட கடந்த சில போட்டிகளில் அணி வீரர்களின் திறமையில் ஷாருக்கான் கடுமையாக அதிருப்தி அடைந்துள்ளார்.




அணி தொடர்பான முடிபுகள் எடுக்கும் போதெல்லாம் ஷாருக்கான் அணித்தலைவர் கங்குலியிடம் ஒரு வார்த்தை கூட சொல்வதில்லை. அணிப்பயிற்சியாளர் புகானனிடம் தனது முடிபுகளை ஷாருக்கான் சொல்லி விடுவார் .போட்டி ஆரம்பமாவதற்கு சற்று முன்பாக அதை கங்குலியிடம் புகானன் சொல்வார்.

சொய்ப் அக்தர் விடயத்திலும் கங்குலிக்கும் புகானனுக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் இருந்தன. காயத்திலிருக்கும் அக்தர் விளையாட வேண்டாம் என்று புகானன் கருதினார்.ஆனால் கங்குலியோ அவர் விளையாட வேண்டும் என்றார். இதிலும் கங்குலியின் விருப்பம் நிறைவேறவில்லை. இதனால் அதிகாரமில்லாத கைப்பாவையாக பயன்படுத்துகிறார்களே என்ற எண்ணம் கங்குலிக்கு ஏற்பட்டுள்ளதால் அவரும் வருத்தத்தில் உள்ளார்.

ஐ.பி.எல் அணிகள் தங்களுக்கு சொந்த மைதானத்தில் போட்டிகளை நடத்தும் போது கேளிக்கைவரி செலுத்துவதிலிருந்து விலக்குப் பெற்றுள்ளன. கொல்கத்தாவில் இதற்கு விலக்கு அளிக்கப்படவில்லை.ஆகவே மேற்கு வங்காள முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவுக்கு நெருக்கமான கங்குலி அவரிடம் பேசி வரிவிலக்கு வாங்கித் தரவேண்டும் என்று ஷாருக்கான் எதிர்பார்த்தார். ஆனால் அதற்கு கங்குலி பிடிகொடுக்கவில்லை. சர்ச்சைகள் பற்றி கங்குலியிடம் கேட்டபோது வெளியான தகவல்களில் ஏதும் உண்மையில்லை என்று மறுத்துள்ளார்.

பயிற்சியாளருக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டு உள்ளதா என்று புகானிடம் கேட்டபோது அணி தோல்வியடைவதால் அதிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கை தான் இது என்றார் அவர்.

கங்குலியின் அதிகாரத்தை முடக்குவதோடு அடுத்து பயிற்சியாளருக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஷாருக்கான் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ஐ.பி.எல் விதி என்ன சொல்கிறது?**

ஐ.பி.எல் உரிமையாளருக்கும் வீரருக்கும் பிரச்சினை ஏற்படும்போது வீரர் மீது அதிருப்தி மற்றும் அவரது நடத்தையில் பிரச்சினையைக் கண்டறிந்தால் அவரை அணியிலிருந்து நீக்க முடியும். இதில் தகராறு ஏற்படும் பட்சத்தில் பிரச்சினைக்குரியவருக்கு நோட்டீஸ் அனுப்பப்படும்.

அதன் பின் அமைக்கப்படும் நடுவர் மன்றத்திற்கு பிரச்சினை செல்லும். அங்கு வழங்கப்படும் தீர்ப்பை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஐ.பி.எல். வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்த விதிமுறைகளில் வீரரின் திறமைக் குறைபாட்டால் அணியிலிருந்து நீக்குவது தொடர்பாக ஏதும் வெளிப்படையாக இடம் பெறவில்லை. என்றாலும் அணி உரிமையாளர் நினைக்கும் பட்சத்தில் அணி வீரரை நீக்க முடியும். (5)

# இன்று ஒரு தகவல்

## துன்பமும் துணையும்

காசி நாட்டில் ஒரு வேடன் இருந்தான். அவன் வழக்கம்போல் காட்டுக்கு வேட்டையாடப் போனான். ஒரு மானுக்கு நேராக குறிபார்த்து அம்பை விட்டபொழுது அது குறி தவறி பெரிய மரமொன்றில் குத்தி நின்றது.

அம்பில் விஷம் தடவியிருந்தமையால் மரம் பட்டுப் போக ஆரம்பித்தது. அதிலிருந்து இலை, காய் எல்லாம் உதிரத் தொடங்கியது. கொஞ்சநாளில் அந்த மரம் காய்ந்து பட்டுப் போனது.

அந்த மரத்திலுள்ள பொந்தில் ஒரு கிளி நீண்ட காலமாக இருந்தது. மரம் வளமாக இருந்த காலத்தில் நிறையப் பறவைகள் அதில் தங்கியிருந்தது. மரம் காய ஆரம்பித்ததும் வேறு இடம் பார்த்து ஒவ்வொன்றாகப் பறந்து போனது. ஆனால் அந்தக் கிளி மட்டும் அதைவிட்டு எங்கும் போக விரும்ப வில்லை. அந்த மரத்தின் மேல் அவ்வளவு அன்பாக இருந்தது. இரை தேடுவதற்கு கூட வெளியே போகா மல் தங்கியிருந்த படியினால் கிளி மிகவும் வாடிப் போனது.

அந்தக் கிளியின் செய்கையைப் பார்த்த இந்திரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தேவலோகத்திலிருந்து புறப்பட்டு பூலோகத்திற்கு வந்து சேர்ந்தான். ஒரு சாதாரண மனுஷன் மாதிரி கிளிக்கு முன் போய் நின்றான்.

“ஏ கிளியே! இந்த மரமெல்லாம் காய்ந்து போய் விட்டது. இலையுமில்லை , காயுமில்லை செழிப்பான வேறு மரங்கள் இருந்தும் நீ மட்டும் ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறாய்?'' என்று கேட்டான் .

கிளிக்கு தலைவலி அதிகம். வந்திருப்பது தேவேந்திரன் தான் என்பதைப் புரிந்து கொண்டது.

“தேவேந்திரா! நான் இந்த மரத்தில்தான் பிறந்தேன்! வளர்ந்தேன்! சின்ன வயதிலிருந்தே என்னை வளர்த்துக் காப்பாற்றி ஆளாக்கியது இந்த மரம் தான். எனக்குப் பசி எடுத்தபோது பழம் கொடுத்தது இந்த மரம் தான். ஆபத்து வந்தபொழுது அடைக்கலம் கொடுத்ததும் இந்த மரம் தான். இந்த நேரத்தில் மட்டும் நான் இதை விட்டு பிரிவது சுயநலமில்லையா? இது துன்பப்படும் காலத்தில் நானும் கூட இருந்து துன் பத்தை சகித்துக் கொள்வது தான் நியாயம் . உதவி செய்தவர்களை உதறித் தள்ளுவது நல்லதில்லை என்பது உங்களுக்கே தெரியும்! . “தேவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தீர்த்து வைக்கக் கூடிய நிலைமையிலுள்ள நீங்களே எனக்கு இப்படி உபதேசம்பண்ணலாமா? ” என்று கேட்டது கிளி. இதைக் கேட்டதும் இந்திரனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

“கிளியே ! நண்பர்கள் என்றால் உன்னை மாதிரித் தான் இருக்க வேண்டும் . பொதுவாக ஒருவர் நன்றாக இருக்கும் போது அவரைச் சுற்றி நிறையப் பேர் இருப்பார்கள். கஷ்டப்படும்போது ஓடிப்போய் விடுவார்கள். நீ, அது மாதிரி இல்லை சுகத்தையும் துக்கத்தையும் சமமாக எடுத்துக் கொண்டாய். உன்னைப் பாராட்டுகிறேன்! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் ! தருகிறேன்! ”என்றார் இந்திரன்.

கிளி, “இந்த மரம் முன்பு இருந்தது போல் இலை , பூ, கனிகளுடன் செழிப்பாக இருக்க வேண்டும் !” என்று கேட்டது. இந்திரனும் அப்படியே வரம் கொடுத்தார். அடுத்த வினாடியே மரம் முன்பு இருந்ததை விட செழிப்பாக பூத்துக் குலுங்கியது. அந்தக் கிளியும் சந்தோசமாக வாழ்ந்து இந்திரலோகம் போய்ச் சேர்ந்தது.

மகாபாரதத்தில் பீஷ்மர் தருமருக்கு இந்தக் கதையைக் கூறினார்.“ மற்றவர்கள் துன்பப்படும் போது இந்தக் கிளி மாதிரி எவன் பரிவு கொள்கிறானோ அவன் மேன்மையடைவது நிச்சயம்” என்று கூறினார்.

இந்தக் கதையை ஏன் கூறினேன் தெரியுமா? வயதான காலத்தில் அம்மா, அப்பாவை கவனிக்காத பிள்ளைகள் காதில் விழ வேண்டும் என்பதற்காகத்தான் மற்றவர்கள் துன்பப்படும் போது பரிவு காட்டினாலே அந்த அளவுக்கு மேன்மை கிடைக்கும் என்றால் பெற்றவர்கள் துன்பப்படும் போது பரிவு காட்டினால் எந்த அளவிற்கு மேன்மை என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும் ஒரு வயதான அப்பா தன்னுடைய பிள்ளைகளைப் பற்றி மெச்சிக் கொண்டார்.

“என் பிள்ளை மிகவும் புத்திசாலித்தனமாக குடும்பம் நடத்துகின்றான் அவனுடைய சம்சாரம் கோவித்துக் கொண்டு பிறந்த வீட்டுக்கு போற அளவுக்கு அவன் நடந்து கொள்வதில்லை! ”என்றார்.

“அப்படியா ?” என்று கேட்டேன் ஆச்சரியமாக.

“ஆமாங்க! ஏனென்றால் இவனே அவர்களுடைய வீட்டுக்குப் போய் வீட்டோட மாப்பிள்ளையாக தங்கிவிட்டான்!'' என்றார். இவனெல்லாம் எந்தக் காலத்தில் அம்மா, அப்பாவைக் காப்பாற்றுவது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஜனாதிபதி ஆணைக்குழு முன் ரவிராஜ் படுகொலை வழக்கு விசாரணை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை வழக்குக் குறித்த விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி நாரஹேன்பிட்டிய பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் இந்தப் படுகொலை குறித்த விசாரணைகள் இடம்பெறவுள்ளன. எனினும், இக் கொலை குறித்த விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இன்னமும் முடிக்கவில்லை. இரண்டு சந்தேக நபர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதுடன், விசாரணைகள் சுமுகமாக முன்னெடுக்கப்படுகின்றன” என குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜீ. டபிள்யூ. முத்துபண்டா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குப் பணித்திருப்பதாகவும், சந்தேகநபர்களை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு வலியுறுத்தியிருப்பதாகவும் சட்டமா அதிபர் சி.ஆர். டி.சில்வா கூறியுள்ளார். (அ-5)

# அரசின் பணவீக்கச் சுட்டி ஏற்கமுடியாதது என்கிறார் கொழும்பு பல்கலைக்கழகப் பொருளியல்துறைத் தலைவர்

அரசாங்கம் அண்மையில் வெளியிட்ட மையப் பணவீக்கச் சுட்டியை ஏற்றுக்கொள்ள முடியாது என கொழும்பு பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் கலாநிதி சிறிமால் அபேரத்ன தெரிவித்துள்ளார்.

உணவு மற்றும் சக்திவள பொருட்களின் விலைகள் உள்ளடக்கியிருக்காத இந்த அளவீட்டின் மூலம் மத்திய மற்றும் அடிமட்ட வருமானம் பெறும் மக்களின் உண்மையான பொருளாதார பாதிப்புகள் வெளிப்படாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

''இலங்கை மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையின் படி, மையப் பணவீக்கம் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டே கணிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி 2007 இல் நாட்டின் பணவீக்கம் 8வீதம் மாத்திரமே எனவும், சராசரிப் பணவீக்கம் 7.5 வீதம் எனவும் மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தன” எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த வருடம் மார்ச் மாதத்தில் புதிய அளவீட்டின்படி பணவீக்கம் 23.8 வீதமாக அதிகரித்திருந்தது. ஆனால் உணவு உள்ளிட்ட பொருட்களுடன் கூடிய பழைய அளவீட்டின்படி , பணவீக்கம் 28.1 வீதமாக அதிகரித்துக் காணப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், உணவு மற்றும் சக்திவளப் பொருட்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்திருக்கின்ற நிலையில், அவை மையப் பணவீக்கத்தில் கணக்கிடாமல் விடப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரத்திலும், அந் நாடுகளது மக்களின் தினசரி வாழ்க்கையிலும் உணவுப் பொருட்களும், சக்தி வளங்களும் முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றன எனவும் கலாநிதி அபேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மையப் பணவீக்க கணிப்பீட்டு முறையை நிராகரித்திருக்கும் அவர், இதனைக் கொண்டு ஏனைய நாடுகளின் பணவீக்கத்துடன் இலங்கைப் பணவீக்கத்தை ஒப்பிட முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல நாடுகளது வழமையான மையப் பணவீக்கம் 2 வீதமாகவே இருக்கின்ற நிலையில், இலங்கையின் மையப் பணவீக்கம் 9 வீதமாகவிருப்பதே அதிர்ச் சியளிக்கிறது அதனை 2 வீதமாகக் குறைப்பதே எமது இலக்காக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# இராசிபலன்

23.05.2008
(வைகாசி 10, வெள்ளிக்கிழமை)
மூலம் முற்பகல் 11.05 மணிவரை
திருதியை பிற்பகல் 01.29 மணிவரை
இராகுகாலம் 10.22- 11.52 மணிவரை
சுபநேரம்-05.52-07.22 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சரீரப்பிரயாசை, பிரயாணம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு. |
| இடபம் | வீண் பகை,காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, பொருள்விரயம். |
| மிதுனம் | களஸ்திர நன்மை, தேகநலன், முயற்சிகைகூடும், சத்துருஜெயம். |
| கடகம | எடுத்த காரியம் கைகூடும, தேக நலன், முயற்சி கைகூடும், சத்துருஜெயம். |
| சிங்கம் | கௌரவக் குறைவு, தொழிலில் மந்த நிலை, குடும்பக் கவலை, பணக்குறைவு. |
| கன்னி | தன்னம்பிக்கைக் குறைவு, உறவினர் சந்திப்பு, உடல்நலக் குறைவு தொழில் ஆரம்பம். |
| துலாம் | கூட்டுமுயற்சி, இனிய சம்பவம், உறவினர் வருகை, கீர்த்தி. |
| விருச்சிகம் | முயற்சிதாமதம், மனோசங்கடம், தனவிரயம், போசனசுகக் குறைவு. |
| தனுசு | நல்லமுயற்சி, தெய்வசிந்தை, சயனசுகம், தேகநலன். |
| மகரம் | சோம்பல்நிலை, புத்திரரால் கவலை, பிறருக்கு உதவுதல், முயற்சிதாமதம். |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, காரியசித்தி, போசனசுகம், உடல்நலம். |
| மீனம் | தூரதேசச் செய்தி, நன்கொடை, ஆரோக்கியம், முயற்சிகைகூடும். |

வளவன்

# கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை கெரில்லா பாணியில் புலிகள் தாக்கலாம்

## ஆய்வாளர்கள் தெரிவிப்பு

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்ற கடந்த 10 ஆம் திகதி முதல் கிழக் கில் விடுதலைப் புலிகளின் கெரில்லா பாணியிலான தாக்குதல்கள் சற்று தீவிரமடைந்து வருவதாகக் கொழும்பில் இயங்கும் சிங்கள நாளேடுகளும் இணையத்தளங்களும் செய்திகளை வெளியிட்டுள்ளன்.

தேர்தலுக்கு முன்னிரவு அம்பாறையில் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு. இக் குண்டுத் தாக்குதலை யார் மேற்கொண்டது என்பது தொடர்பில் இதுவரை தெளிவில்லை.

தேர்தல் தினத்தன்று திருகோணமலை அஷ்ரப் துறைமுகப் பகுதிக்குள் நிறுத்தப்பட்டிருந்த கப்பல் மூழ்கடிப்பு, அதே தினத்தில் அம்பாறைப் பகுதியில் விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் எறிகணை வீச்சு, அதனைத் தொடர்ந்து தற்போது கிழக்கில் இடம்பெற்று வரும் சிறுசிறு தாக்குதல் சம்பவங்கள்,-கிழக்கில் புலிகளின் தாக்குதல்கள எதிர்காலத்தில் வேகமாகப் பரவும் ஏது நிலையை அடை யாளப் படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கை இணைக்கும் தென்னிலங்கையின் காட்டுப் பகுதிகளிலும் ஆங்காங்கே அவ்வப்போது இடம்பெற்று வருகின்ற தாக்குதல் சம்பவங்களும் புலிகளின் கிழக்கு மீதான அடுத்த கட்ட கெரில்லாப் பாணியிலான தாக்குதலுக்கான முன்னோட்டமாக அமைந்து வருவதை உணர்த்துவதாகக் களநிலை வர ஆய்வாளர்களால் பார்க்கப்படுகின்றது.

கிழக்கிலிருந்து புலிகளை முற்றுமுழுதாக அப்புறப்படுத்தி விட்டதாகவும் கிழக்கை ஜனநாயக மயப்படுத்தி விட்டதாகவும் அரசாங்கம் சர்வதேச அளவில் பரப்புரைகளை மேற் கொண்டு வரும் நிலையில்,

புலிகள் தற்போது கிழக்கில் மேற்கொள்ளும் சிறுசிறு தாக்குதல் சம்பவங்கள் விரைவில் அரசாங்கத்தின் சர்வதேச கூச்சலுக்கு ஆப்பு வைப்பதுபோல மாறலாம் எனவும் செய்திகள் வெளியாகி வருகின்றன. (ச-5)



பருத்தித்துறை இலங்கை வங்கியின் பொன்விழாவை முன்னிட்டு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்திய 20X20 மென்பந்து சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக வீரர்களுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தலைவர் கதிர்காமராஜா, இலங்கைவங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன், வடமாகாண இலங்கைவங்கி செயற்பாட்டு முகாமையாளர் ந.சீவரட்ணம் இலங்கை வங்கி ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர் சு. பாலசுப்பிரமணியம், பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவனேசன், ஊடகவியலாளர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் கல்வியாண்டு 2007/08க்கான முதுகலைமாணிக் கற்கை நெறிகளான பிரதேச திட்டமிடல், அபிவிருத்திக் கற்கைநெறி, குடித்தொகை அபிவிருத்திக் கற்கை நெறி மற்றும் கல்வியியல் முதுமாணி ஆகியவற்றிற்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

கற்கை நெறிகளுக்கான பதிவுகளை மேற்கொண்ட மாணவர்கள் அனைவரும் சமுகமளிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு ''வாக்கினிலே இனிமை வேண்டும்'' என்னும் பொருள் பற்றி குப்பிளானைச் சேர்ந்த ஆசிரியரும் எழுத்தாளரும் ஆன.ஜ. சண்முகம் பி.ஏ ஆன்மீகசொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

# கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இல்லை எனவும் இதை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அண்மையில் நடைபெற்ற மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர் தமது பொருட்களை சந்தைப்படுத்தவும் அவற்றிற்குத் தேவையான மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் மிக இன்றியமையாதது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஓ-35)

# நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நெயோ கல்சரல் கவுன்சிலின் ஏற்பாட்டில் கலையார்வனின் ''ஆன்மீகத்தில் குருநகர் மக்கள்'' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு குருநகர் புனித கார்மேல் மாதா மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறை தலைவர் அருட்கலாநிதி ஞா. பிலேந்திரன் தல்லைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலாளர் மரியதாஸ் ஜெகூ கலந்து கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையை முன் னாள் உதவி அரசாங்க அதிபர் ச.அ. ஜெறோம், நூல் வெளியீட்டுரையை யாழ்.நெயோ கல்சரல் கவுன்சில் இயக்குநர் கலாபூஷணம் வி.யே. கொன்ஸ்ரன்ரைன், கருத்துரையை யாழ். மரியன்னை பேராலய உதவிப் பங்குத் தந்தை அருட்திரு பா.பிறாயன் ஆகியோர் வழங்கவுள்ளனர். நூலின்முதற்பிரதியை இலங்கை வங்கி காங்கேசன் துறைக் கிளை முகாமையாளர் பே.பிரான்சிஸ் பெற்றுக் கொள்வார். (அ-6)

## டாக்டர் ரகுராம் பிழையான தகவலை கொடுக்கிறார்

# தடுப்பு மருந்தேற்றுவதால் எந்தப் பக்கவிளைவும் ஏற்படாது

## யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கம்

*பத்திராதிபர் ,*
*வலம்புரிப் பத்திரிகை,*
*யாழ்ப்பாணம்.*

அன்புடையீர்

தங்களது 18.05.2008ஆம் திகதிய நாளிதழில் டாக்டர் .க .ரகுராம், மடத்தடி, உரும்பிராய் வடக்கு என்பவரால் தடுப்பூசிகள் சம்பந்தமாக வெளியிடப்பட்டிருந்த விளம்பரம் பற்றி சுகாதாரத் திணைக்களத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த விரும்புகிறேன். இவ் விளம்பரத்தில் தடுப்பு மருந்தேற்றல் திட்டம் மிக மோசமாக விமர்சிக்கப்பட்டிருந்தது. தடுப்பு மருந்தேற்றுவதனால் பாரதூரமான பக்கவிளைவுகள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனால் உண்மையில் இலங்கையில் 1970ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட, விரிவாக்கப்பட்ட தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் மூலம் பல தொற்று நோய்கள் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளன. பல தொற்றுநோய்களின் பரம்பல் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன:போலியோ, தொண்டைக்கரப்பான், குக்கல் போன்ற பல நோய்கள் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இலங்கையில் 1993ஆம் ஆண்டின் பின்னர் கடந்த 15 வருடங்களாக எந்தவொரு போலியோ நோயாளியும் இனங்காணப்படவில்லை. இதனைப் போலியோ தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் மூலம்தான் சாதிக்க முடிந்தது.இலங்கையில் போலியோ தடுப்பு மருந்தேற்றி பாரதூரமான பக்கவிளைவுகள் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. இலங்கையில் ஒவ்வொரு தடுப்பு மருந்தேற்றலுக்குப் பின்பும் ஏற்படக்கூடிய சிறிய பக்க விளைவுகளைக் கூட சுகாதாரத் திணைக்களம் மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறது. ஏதாவதொரு தடுப்பூசிக்கு எங்காவது பக்க விளைவுகள் ஏற்பட்டால் சுகாதாரத் திணைக்களம் உடனடியாக அதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனவே தடுப்பு மருந்தேற்றல் திட்டத்திற்கான முழுப் பொறுப்பையும் சுகாதாரத் திணைக்களம் ஏற்றுக்கொண்டுள்ளது. தடுப்பு மருந்தேற்றுவதற்கு எவரும் தயங்கவோ அல்லது பயப்படவோ தேவையில்லை. தடுப்பு மருந்து பற்றிய மேலதிக விளக்கங்களை சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் போன்றோர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே இவ்வாறான பொறுப்பற்ற, ஆதாரமற்ற விளம்பரங்களைக் கண்டு யாரும் அஞ்சத் தேவையில்லை.

நன்றி.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**பிராந்தியப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

# வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு நூல்வழங்கலும், கணனி வழங்கலும்

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இன்று முதல் நடைபெறவுள்ள களியாட்ட விழாவின் இறுதி நாளான 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வடமராட்சி வலயத்திலுள்ள இரண்டு பாடசாலை நூலகங்களுக்கு நூல்களும் மூன்று பாடசாலைகளுக்கு கணனியும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

நூல்வழங்கப்பட உள்ள பாடசாலைகள்

- பொலிகண்டி இ.த.க பாடசாலை
- வல்வெட்டித்துறை இ.த.க.பாடசாலை

கணனிகள் வழங்கப்பட உள்ள பாடசாலைகள்

- ஹாட்லிக் கல்லூரி
- உடுப்பிட்டி அ.மி.த.ஆண்கள் பாடசாலை
- வட. இந்து மகளிர் கல்லூரி

மேற்படி பாடசாலை அதிபர்களை தவறாது இந்நிகழ்வில் கலந்து அன்பளிப்புகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (ஓ-19)




# வடமராட்சி கிழக்குக்கு தனியான பிரதேசசபை

வடமராட்சி கிழக்கிற்கென தனியான ஒரு பிரதேசசபை இதுவரை இல்லாததால் இப்பகுதியின் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாலும் வடமராட்சி வடக்கில் பருத்தித்துறை நகர சபையுடன் புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று கிராமசபைகளை உள்ளடக்கியதாக பருத்தித்துறை பிரதேச சபை இயங்குவதாலும் வடமராட்சி கிழக்கு மணற்காடு தொடங்கி சுண்டிக்குளம் வரையிலான நீண்ட பிரதேசத்திற்கு தனயான பிரதேச சபை ஒன்றை உருவாக் கித்தரவேண்டுமென்ற கோரிக்கையை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் முன்வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (ஓ-35)

# வலிக்கண்டி வீட்டுத் திட்டத்திற்கு ரூபா 5மில்லியன் ஒதுக்கீடு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மக்களுக்கான வல்லிபுரம் வலிக்கண்டி வீட்டுத் திட்டத்திற்கு 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான திட்டம் யாழ். அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபரின் அனுமதி கிடைத்ததும் வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படுமெனவும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (அ-35)

# கடற்றொழிலாளர் சங்கங்களை இயக்குவதற்கு நடவடிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மணற்காடு குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இரு சங்கங்களையும் மீள இயக்குவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும், கடற்றொழில் பரிசோதகரும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது. (ஓ-35)

# முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு வழங்கல்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் 5முன்பள்ளிகள் இயங்கிவருகிறது.இவ் முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு வழங்குமாறு எவருமே கோரிக்கையை முன் வைக்காததால் அவர்களுக்கு சத்துணவு வழங்கப்படுவதில்லை எனவும் இனிவரும் காலங்களில் சத்துணவு திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் உள்ள முன்பள்ளிகளுக்கும் கிடைக்கும் எனவும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அன்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் சிறிஸ்கந்தகுமார் தெரிவித்தார். (ஓ-35)

# கசிப்பு உற்பத்தியை தடைசெய்யக் கோரிக்கை

குடத்தனைப் பகுதியில் கள் விற்பனை நிலையம் செயலிழந்துள்ளதால் கிராமத்தின் நடுப்பகுதியில் சட்டவிரோதமாக கள் விற்பனை செய்யப்படுவதாகவும் அத்துடன் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச் செயற்பாடுகளால் அப்பகுதி மக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள்.

ஆகவே கசிப்பு உற்பத்தியை தடைசெய்ய ஆவன செய்ய வேண்டுமென குடத்தனை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஊடாக உதவி அரசாங்க அதிபருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-35)

# பிரதேச மலர்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான "பிரதேச மலர்" ஒன்று வெளியிடப்படவுள்ளது. இடப்பெயர்வு, தொழில் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் இதில் சேர்க்கப்படவுள்ளதாகவும் இவ் மலர் விரைவில் வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-35)







ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மந்துவில் J/345 ,J/346 ,J/347 கிராம அலுவலர் பிரிவினுள் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பயனாளிகளுக்கு இம்மாதம் 9ஆம் திகதி இரண்டாம் கட்ட வாழ்வாதாரக் கொடுப்பனவு ரூபா 20 ஆயிரம் வழங்கப்பட்ட நிகழ்வில் ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் இணைப்பாளர் ஆர்.ஹரிகரன் உரையாற்றுவதையும், சாவகச்சேரி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஆர்.இரகுநாதன் வாழ்வாதார உதவியை வழங்குவதையும் பயனாளிகளில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## பதினைந்து நாட்களுக்குள் 15 பேரைக் காணவில்லை

மே மாதத்தின் முதல் அரைப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் 15 பொது மக்கள் காணாமல் போயிருப்பதாக் திருகோணமலை மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மே 9ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரையான காலப் பகுதியிலேயே இந்தக் காணாமல் போதல் அதிகமாக இடம்பெற்றிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பாளர் குளோரியா பிரான்ஸிஸ் கூறினார். காணாமல் போனவரில் இருவர் பெண்கள் எனவும் பி.பி.சி சிங்கள சேவையான சந்தேசியவுக்கு வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்டார். (ச)

## சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு எனும் தலைப்பிலான பொது விரிவுரை தொடர் 07 நாளை 24ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை இருதய மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி பி.லக்ஸ்மன் தலைமையில் இடம் பெறவுள்ள இவ் விரிவுரையினை அங்கொட மனநல வைத்தியசாலை மனநல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாசன் 'தற்கணிப்பும் சுகநலமும்' எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள பொதுமக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் வருகை தந்து பயன் பெற முடியுமென புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (அ)


சாயி அமிர்தம்



துளி-07
23.05.2008


**30 வருடத்தை ஒரு மணிநேரமாக்கினார் பகவான்**

கொழும்பைச் சேர்ந்த அடியவர் பகவானை தரிசிக்கச் சென்றார். பகவான் தனது அறையில் அடர்ந்த காட்டை உருவாக்கி அந்த அடியவரை 30 வருடம் தவம் செய்ய வைத்தார். இத்தனையும் நடந்தது ஒரு மணிநேரத்தில். தெய்வத்தால் நேரத்தை கூட்டவும், குறைக்கவும் முடியும்.

"இதேபோன்றுதான் கிருஷ்ண அவதாரத்தில் நேரத்தை சுருக்கி சொற்பவேளையில் பகவத் கீதையை அர்ச்சுனனுக்கு நானே உபதேசித்தேன்" – பாபா

ஜெய் சாயிராம்

திருவருள் நற்பணி மன்றம் தொண்டமானாறு. (1235)



யு.என்.டி.பியின் அனுசரணையுடன் அல்வாய் வடக்கில் புனரமைக்கப்பட்ட பொதுக் கிணற்றை ஐ.நாவின் அபிவிருத்தித்திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்ளஸ் கீ திறந்து வைப்பதையும், கற்கோவளம் புனித நகரப்பகுதியில் அமைக்கப்பட்ட வீட்டிற்கான பத்திரத்தை அவர் வழங்குவதையும் முதல் இரு படங்களிலும், வேலணை செட்டிப்புலம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை திறந்து வைப்பதற்காக யாழ்.அரச அதிபர் கணேஷ், வேலணை பிரதேச செயலர் நந்தகோபாலன் மற்றும் டக்ளஸ் கீ ஆகியோர் அழைத்துச் செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.


பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே!

# ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

உங்கள் நன்மதிப்பு பெற்ற ஸ்தாபனம்
புதிதாக இறக்குமதி செய்துள்ள புத்தம்புதிய ரகங்கள் விற்பனைக்கு வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

1. புத்தம் புதிய டிசைன் ஷிபோன் சுரிதார், றெஸ் மற்றீரியல் போட்டோ இணைப்புடன்
2. New டிசைன் றிச் பழு கென்றாஸ்ட் பியூட்டி சில்க் சாரிஸ்
3. CAPSUL வித் பிளவுஸ் EXCLUSIVIE பான்ஷி சாரிஸ்
4. VARSHA சாரிஸ், GUINGHT பான்ஷி சாரிஸ்
5. JAMMU சாரிஸ் பான்ஷி செக் உடல் ஜரி சில்ஸ் மிக்ஸ் எம்பிரடர் கென்றாஸ் ஜரி போடர்
6. RAIGURU சாரிஸ், HANDLOOM உற்பத்தி மஸ்தான், கென்றாஸ் போடர் ஜரி சீக்குயின் போடர் உடன் புதிய ரகம்
7. பான் ஸ்ட் வேக் & கோல்ட் பிரிண்ட் சாரிஸ் வித்பிளவுஸ், சில்வர் வேக் புதிய தெரிவுகள்.
8. CLASSI CLADY பான்ஷி சாரிஸ்
9. OM, SHANT கோல்ட் & சில்வர் கலந்து வேக் செய்துள்ள புதிய சாரிஸ்
10. புதிய திருமணப் பட்டு புடைவைகள் அனைத்தும் சிறந்த தெரிவுகளாக பெற்றுக் கொள்ள வாருங்கள், வந்து பாருங்கள் வாங்கி மகிழுங்கள்

# ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

தலைமை ஸ்தாபனம் 13,14 பெரியகடை வீதி,
கிளை நிறுவனம் 47, பெரியகடை வீதி , யாழ்ப்பாணம்.

1) முதல் தளம், பலவிதமான துணி வகைகள் ஒரே இடத்தில் வித்தியாசமான தெரிவுகளை மஸ்லின் காட்டன் பிளேன், விசேடமாக.
அரவிந்த்மில், றெறின் பிளவுஸ் பீஸ் No A மீற்றர் 275-No B மீட்டர் 225/- சகல விதமான புடைவைகள் கலந்த பகுதி
2) 1ஆம் மாடி ஆடவருக்கான சேட் ரவுசர், சேட்டிங் சூட்டிங் ஆண்களுக்கான அனைத்து ரெடிமேட் வகைகளுக்கும் அடங்கலாக விசேட தரமானது பிளேன் அன் ஸ்ரிப், லோங்சிலிப், சோட்சிலிப் சேட், ~~1375~~/= 700/=
போய்ஸ் சேட் லோங்சிலிப், சோட் சிலிப் சேட் ~~790~~/= 400/=
டெனிம் ரவுசர்கள், ஏனைய ரவுசர்கள்

ஆடவருக்கான சேட் வகைகள்
★Woods Vally ★Caruen (Paris) ★Alain Philippe ★True Knight ★Inzio (Swiss Cotton) ★Pierri Carlo ★Perri Allcn ★London Groovs (Cool Ventilated) ★Jordi

3) 1ஆம் மாடி நங்கையருக்கான சோளிகிட், சுரிதார் அடங்கலாக
4) 1ஆம் மாடி சிறுவர்களுக்கான அனைத்து ரெடிமேட் ஆடை வகைகள்
5) 2ஆம் மாடி சகலவிதமான பென்ஷி ரகங்கள் அடங்கலாக ரவலிங் பேக், றோல்கோல்ட், பான்ஷி, சாறி காப்பு கொலோன் வகை, பேபி நீட்ஸ்ரகங்கள் அனைத்தும் வசதியாக பார்த்து தெரிவு செய்து கொள்ளலாம்.

கொலோன் வகை
Angeo, Chamle, Jasmin, Blue, Hat, Hat, Havek Sky, Cigar, Kes Kala, Boss

பவுடர் வகை
Tara, Voodoo, Ponds, Emami, Jasmin , Sandal

கிறீம் வகை
Fair & Lovly , Fair Evre, Fair & Hand Some , Cucumber, Nycil, Nevia

(C-1159)

**G.S.LINGANATHAN & CO**
13,14 GRAND BAZAAR 47, GRAND BAZAAR JAFFNA


## உற்சவகால ஏற்பாடுகள் தொடர்பாக நயினாதீவில் நேற்று கலந்துரையாடல்

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ கால ஏற்பாடுகள் தொடர்பாக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நேற்று விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் தீவுப்பகுதி கடற்படை அதிகாரி, ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, ஆலய நிர்வாக சபையினர் மற்றும் அரச உத்தியோகத்தர் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது குறிகாட்டுவான், நயினாதீவு இறங்கு துறைகளில் பொதுமக்களுக்கு உதவுவதற்கென கடற்படையினரை அமர்த்துதல், கடற்பயணத்தின்போது பக்தர்கள் அணிந்து கொள்வதற்கு தேவையான உயிர் காப்பு அங்கிகளை பெற்றுக் கொள்ளுதல், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துதல் என்பன தொடர்பாக இக் கலந்துரையாடலில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து நயினாதீவுக்கு செல்லும் பக்தர்களின் போக்குவரத்து கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு கடற்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்பட்டது. (எ)

## மனித உரிமை கொள்கைகளை மீள்மதிப்பீடு செய்ய வேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படாத இலங்கை தனது நாட்டின் மனித உரிமைகள் தொடர்பான கொள்கைகளை மீண்டும் மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமை விடயத்தில் இலங்கை விழித்துக் கொள்ள வேண்டிய நேரம் ஏற்பட்டுள்ளது என நியூயோர்க்கை தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அமைப்பான மனித உரிமைகள் பேரவையில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படாமை தொடர்பாக இலங்கை அரசாங்கம் தன்னைத் தானே கடிந்து கொள்ள வேண்டியிருப்பதாக அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் அவை தொடர்பான செயன்முறைகளை இலங்கை அரசாங்கம் மீண்டும் மதிப்பிட்டு சரியான முறையில் நடைமுறைப்படுத்தவேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது. பொதுச் சபையின் செய்தியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புரிந்திருப்பார் என நினைக்கின்றோம். இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டுவர அவர் நடவடிக்கை எடுப்பார் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் அதிகரித்திருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்பட பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்ததுடன் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவு வழங்கக் கூடாதென கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட்டிணைந்து கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–5)


ஆனந்தி திருமண சேவை

**மணமகள் வேண்டும்**

இலண்டனில் மாணவர் விஸாவில் கல்விகற்கும் கவர்ச்சிமிகு தோற்றமுடைய 1978இல் பிறந்த கிரகபாவம் 22 1/4 கொண்ட விசாக நட்சத்திரம் 5இல் செவ்வாயுடைய இந்துக் குடும்ப வாலிபருக்கு வெளிநாடுகளில் நிரந்தர குடியுரிமை கொண்டிருக்கும் பெண்மணியைத் தேடுகின்றோம். அஞ்சல், நேரடி மற்றும் 0212228708 தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

V.A. சிவராசா சோதிடர்
ஆனந்தி திருமணசேவை
56,அம்மன் றோட்.
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (234)

தேவை

குவைற்,டுபாய்,கட்டார்,போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் Salesman (supermarket) Security guard, Helpers, House maids இன்னும் பல வேலைவாய்ப்புகள். ஊடனடியாக போகக்கூடியதாக உண்டு மேலதிக விபரங்களுக்கு. **LOTUS JOBS BANK**. No.10,Rudra Mawatta Colombo 06. Tp: 0112361336.

# சமர்க்களங்களின் சரித்திர நாயகன் பிரிகேடியர் பால்ராஜ்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும் சமர்க்களங்களின் நாயகனுமான பிரிகேடியர் பால்ராஜ், எதிரிக்கு போர்முனைகளில் சிம்ம சொர்ப்பனமாக விளங்கினார்.



தமிழீழத்தின் இதயபூமியான கொக்குதொடுவாயைச் சேர்ந்த பிரிகேடியர் பால்ராஜ் 1983ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார்.

வன்னியில் மேஜர் பசீலனுடன் இணைந்து எதிரிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தினார்.

இந்தியப் படை இருந்த காலத்தில் வன்னியில் செயற்பட்ட இவர் மேஜர் பசீலனுடன் தமிழீழத் தேசியத் தலைவர் இருந்த மணலாறு மண்ணில் இருந்தபோது அவர்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் மேஜர் பசீலனுடனும் தொடர்ந்து லெப்.கேணல் நவத்துடனும் செயற்பட்டார்.

1989இல் முல்லைத் தீவு, கிளிநெச்சி, வவுனியா உள்ளிட்ட இந்தியப்படை வெளியேற்றத்தின் பின்னர் வன்னிக்கான தளபதியாகி வன்னியில் தடைக்கற்களாக இருந்த படைத் தளங்களை புடைத் தழிக்கும் நட வடிக்கையில் ஈடுபட்டார்.

1990ஆம் ஆண்டில் கொக்காவில்–மாங்குளம் –கிளிநொச்சி ஆகிய வன்னியின் நடுப் பகுதியில் இருந்த படைத்தளங்கள் இவர் நடத்திய தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் தகர்த்தழிக்கப்பட்டன.

மூல்லைத்தீவைவிரிவாக்கும் படையினரின் 'கடற்காற்று' எதிர் நடவடிக்கையையும் தலைமையேற்று வழி நடத்தனார்.

தமிழீழத் தேசியத் தலைவர் உருவாக்கப்பட்ட முதல் சிறப்பு படையணியான சார்ஸ் அரனியின் முதலாவது சிறப்புத் தளபதியாக இவர் நியமிக்கப்பட்டார்.




வவுனியாவிலிருந்து படையினர் மேற்கொண்ட 'வன்னிவிக்ரம' நடவடிக்கையை முறியடித்து எதிரியின் உலங்குவானூர்தியைச் சுட்டுவீழ்த்தி எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்திய சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தாக்குதல்களை வழிநடத்தினார். 1990 இல் இவரது துணைவியான போராளி வரதா ஒரு மாத காலத்துள் பாம்பு தீண்டி பலியானார்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவுப் படைத்தளம் மீதான 'ஆகாய கடல் வெளி' ச் சமரில் வன்னிப் பகுதி ஊடாக நகர்ந்து சுற்றுலா விடுதி படைமுகாம் தகர்ப்பு நட வடிக்கை இவர் தலைமையில் நடத்தப்பட்டது. மணலாறில் படைகள் மேற்கொண்ட 'மின்னல்' நடவடிக்கை முறியடிப்புத் தாக்குதலையும் வழி நடத்தியிருந்தார்.

இதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்துக்கான ஒரே பாதையான கிளாலிப் பாதையை படைகள் மூடிவிடும் நோக்கத்தில் மேற்கொண்ட 'யாழ்தேவி' நடவடிக்கையை முறியடித்து எதிரிகளின் டாங்கிகளை முதல் தடவையாக அழித்த நடவடிக்கையில் காலில் காயமடைந்தார்.

1995ஆம் ஆண்டில் படையினர் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட ''முன்னேறிப் பாய்தல்'' முறியடிப்புத் தாக்குதலான புலிப் பாய்ச்சலில் அணிகளை களத்தில் வழி நடத்தி எதிரிக்குப் பலத்த இழப்புக்களை ஏற்படுத்த அந்த நடவடிக்கை முறியடிக்கப்பட்டதில் பங்காற்றினார்.



யாழ்ப்பாணத்தினை படையினரின் ''சூரியக் கதிர்'' நடவடிக்கை எதிர்தாக்குதலில் பங்காற்றிய இவர் 1996 ஆம் ஆண்டில் விடுதலைப் போராட்டத்திற்கு பெரும்பலம் சேர்த்து எதிரிக்குப் பேரழிவை ஏற்படுத்திய முல்லைத் தீவு படைத்தளம் அழிக்கப்பட்ட ஓயாத அலைகள் 01 நடவடிக்கையின் ஒருங்கிணைப்புத் தளபதியாக செயற்பட்டார்.

2001ஆம் ஆண்டில் முகமாலையில் இருந்து எதிரி மேற்கொண்ட ''தீச்சுவாலை என்ற பெரும் தாக்குதலையும் முறியடித்ததில் முதன்மைப் பங்கை வகித்திருந்தார். போர் நிறுத்த காலத்தில் மட்டக்களப்பின் வாகரைப் பகுதியில் நின்று செயற்பட்ட இவர் அங்கு ஆழிப் பேரலையில் அகப்பட்டு தப்பினார். பின்னர் வன்னிக்குத் திரும்பிய இவர். போராளிகளுக்கு பயிற்சி கொடுத்து வளர்த்தல் மற்றும் போரியல் உத்திகளை கற்றுக் கொடுத்தல் ஆகிய முதன்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டார். *

## வேட்பாளர் தேர்தலில் ஒபாமா முன்னணியில் இறுதிவரை போராட ஹிலாரி கிளின்டன் முடிவு

(நியூயோர்க்)

அமெரிக்க அதிபர் பதவிக்கு ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளருக்கான தேர்தலில் ஒபாமா ஹிலாரி ஆகியோர் தலா ஒரு மாகாணங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.





ஆனால் இறுதிவரை போராடி முடிவை அறிய ஹிலாரி ஆர்வமாக இருக்கிறார். அமெரிக்கா அதிபர் பதவிக்கான தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் நடக்கிறது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை தேர்வு செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. அமெரிக்கா முன்னாள் அதிபர் பில் கிளின்டனின் மனைவி ஹிலாரி கறுப்பின தலைவர் ஒபாமா ஆகியோருக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது.


அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு மாகாணங்களிலும் ஜனநாயக கட்சி பிரதிநிதிகள் தாங்கள் விரும்பும் வேட்பாளரை தேர்வு செய்து வருகின்றனர். கென்டகி மற்றும் ஓரியான் மாகாணங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் நடந்தது. கென்டகி மாகாணத்தில் நடந்த தேர்தலில் ஹிலாரிக்கு வெற்றி கிடைத்தது.

ஓரியான் மாகாணத்தில் நடந்த தேர்தலில் ஒபாமா வெற்றி பெற்றார். இதுவரை நடந்துள்ள ஒட்டுமொத்த மாகாணங்களில் தேர்தல் முடிவுகளின் படி ஒபாமா முன்னணியில் உள்ளார். இது பற்றி ஜனநாயக கட்சி வட்டாரங்கள் கூறுகையில், எங்கள் கட்சி சார்பில் அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒபாமாவிற்கே அதிக வாய்ப்பு உள்ளது. இருந்தாலும் இன்னும் சில மாகாணங்களில் தேர்தல் நடக்கவுள்ளது. அதன் முடிவுகள் வெளிவந்த பின்னரே அதிபர் தேர்தலில் போட்டியிடுவது யார் என்பது பற்றி உறுதியாக கூற முடியும் என்றனர். ஹிலாரி கூறுகையில், கென்டகி மாகா ணத்தில் வெற்றி பெற்றது மகிழ்ச்சி தருகி றது. இறுதிக் கட்டம் வரை போராடிப் பார்க்க முடிவு செய்து விட்டேன். அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கு எனக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என்றார். (அ–5)

## தீவிரவாதத்தை ஒடுக்க கூட்டு நடவடிக்கை இந்தியா –பாகிஸ்தான் இடையே உடன்பாடு

(இஸ்லாமாபாத்)

தீவிரவாதத்தை ஒடுக்க கூட்டு நடவடிக்கை மேற்கொள்வது என்று இந்தியா–பாகிஸ் தான் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது . எல்லைக் கட்டுப்பாட்டு கோடு பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை நீடிக்கவும் முடிவு செய்யப்பட்டது.



பாகிஸ்தானில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையில்புதிய அரசு பதவி ஏற்றுள்ளது. அதைத் தொடர்ந்து இந்தியா– பாகிஸ்தான் இடையே கடந்த 4ஆண்டுகளுக்குமுன்பு தொடங்கிய அமைதிப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கின.

இந்திய வெளியுறவு மந்திரிப்பிரணாப் முகர்ஜி இதற்காக பாகிஸ்தான் புறப்பட்டுச் சென்றார். நேற்று முன்தினம் பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி ஷா மெக்மூத் குரேஷியுடன் பிரணாப் முகர்ஜி விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார் . இந்தப் பேச்சுவார்த்தையின் போது வேறு யாரும் பங்கேற்கவில்லை .

தீவிரவாதம் இரு நாடுகளுக்கும் பொதுவான அச்சுறுத்தல் என்றும் அதை ஒடுக்குவதற்கு கூட்டு நடவடிக்கை மேற் கொள்வது என்றும் பேச்சுவார்த்தையின் போது முடிவு செய்யப்பட்டது.

### முஷாரப்புடன் சந்திப்பு

முன்னதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை பிரணாப் முகர்ஜி சந்தித்து 30 நிமிடங்கள் பேச்சு நடத்தினார். பாகிஸ்தான் அதிபர் மாளிகையில்நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தையின் போது இந்தியாவுடன் அமைதி நடவடிக்கைகள் தொடர பாகிஸ்தான் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்பட்டு வருவதாக முஷாரப் தெரிவித்தார். நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வரும் காஷ்மீர் உள்ளிட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் சுமூக தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் முஷாரப் உறுதி அளித்தார்.ஐ.நா தீர்மானத்தின் அடிப்படையில் காஷ்மீர் மக்களையும் பேச்சுவார்த்தையில் பங்கேற்க செய்ய வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார். இந்தியா தரப்பில் மற்ற பிரச்சினைகளுடன் சேர்ந்தே காஷ்மீர் பிரச்சனை பற்றியும் விவாதிக்கப்படவேண்டும் என்று வற் புறுத்தப்பட்டது.

பாகிஸ்தான் பிரதமர் கிலானியையும் பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தலைவர் நவாஸ் ஷெரீப் , பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் ஆசிப் அலி சர்தாரி ஆகியோருடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தினார். (அ–5)

## சீனாவுக்கு எதிரான போராட்டத்தை நிறுத்த தலாய்லாமா வேண்டுகோள்

சீனாவுக்கு எதிரான போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்திவிட்டு நிலநடுக்கத்தால் அங்கு உயிரிழந்த மக்களுக்கு இரங்கலைத் தெரிவிக்குமாறு உலகம் முழுவதும் வாழும் திபெத் மக்களுக்கு தலாய்லாமா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## உலக தரிசனம்

ஜெர்மனிக்கு 5 நாள் பயணம் மேற்கொண்டுள்ள தலாய்லாமா சீனாவுக்கு எதிரான போராட்டத்தை இம்மாதம் இறுதிவரையாவது நிறுத்திக்கொள்ளுமாறு புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கோரியுள்ளார்.

சீனாவில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வோம். உடைமைகளையும் உறவுகளையும் இழந்து பரிதவிப்பவர்களுடன் சோகத்தை நாம் பகிர்ந்து கொள்வோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ–5)

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 1

பகுதி -II
நேரம் -1மணி 45 நிமிடம்

மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
சைவத்தமிழ் வித்தியாசாலை உரும்பிராய்

**கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து 1-10வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

வீசியடித்த காற்றுக்கும் சூறாவளிக்கும் அடைமழைக்கும் அகோர வெய்யிலுக்கும் எத்தனையோ வருடங்களாக தாக்குப் பிடித்து நின்ற நான் இன்று கோடரிகள், வாள்கள், கயிற்று வளையங்கள் என்பனவற்றுடன் இங்கு நின்று என்னை வெட்டி விழுத்தி அழிப்பதற்கு திட்டமிடும் .இக் கும்பலைக் கண்டு 'ஓ' என்று கதறி அழாமல் இருக்க முடியாது எத் தனையோ பறவைகள் என்னிடம் உணவைப் பெற்றன. சில கூடுகள் கட்டி உறை விடத்தை அமைத்துக் கொண்டன.

இன்னும் பல தங்கிச் சென்றன எத்தனை மனிதர்கள் என் நிழலில் கோடை காலத்தில் இளைப்பாறினார்கள். கண்ணயர்ந்தார்கள். சுதந்திரமாக வீதியோரத்தில் நின்ற என் கதை முடியப் போகின்றது. நன்றியுள்ளவர்கள் கருணையுள்ளவர்கள் என்னை நினைத்துக் கவலைப்படலாமே அன்றி வேறு என்ன செய்ய முடியும். இனி என்னை நம்பியிருந்த உயிரினங்கள் எங்கே இளைப்பாறப் போகிறதோ என அந்த ஆலமரம் கூறிய போதே அதன் முதலாவது கிளை நிலத்தில் விழுந்தது. அதன் போது அம் மரம் வீதியோரமாக 100வருடங்களாக தான் வாழ்ந்ததை எண்ணிப் பார்க்கத் தொடங்கியது.

1. ஆலமரத்திலே கூடுகட்டி மனிதர்கட்கு உதவி செய்யும் ஒரு பறவை..............................
2. ஆலம் பழத்தின் நிறம்..............................................

**பழ மொழியை நிரப்புக**

3. நிழலின் அருமை....................................
4. இப்பந்திக்குப் பொருத்தமான தலைப்பு.........................................

**பிரித்தெழுதுக**

5. முன்னாயத் தம் .............................. 6. வீதியோரம்..............................
7. இம் மரம் கதையைக் கூறும் போது என்ன நடைபெற்றது.........................................
8. பந்தியில் வரும் குணப்பெயர் ஒன்று......................................

**பந்தியில் வருகின்ற மூவகைக் காலங்களை அட்டவணைப் படுத்துக.**

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர் காலம் |
|---|---|---|
| 9)............................ | 10).................................. | 11........................................ |

**பந்தியிலே வருகின்ற இயற்கை அனர்த்தங்கள் இரண்டு தருக.**

12. 1)................................................................ 2)..................................................

**வசனம் அமைக்குக.**

13.அழி..............................................................
14.அளி..............................................................


**தரப்பட்ட தமிழ் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

15.பறவைகள் .................................. 16. கோடரி..................................................

**தரப்பட்ட தமிழ் சொற்களின் கருத்தை சிங்களச் சொற்களில் எழுதுக.**

17.மரம்............................................ 18.நந்தி..................................................
19. ஆலமரம் பறவைக்குச் செய்த உதவிகள் இரண்டு தருக..............................................
20. கதை கூறும் ஆல மரத்தின் வயது என்ன....................................

**கீழே தரப்பட்டுள்ள வரை படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**




21. Cயிலிருந்து Aஊடாக Bயை அடைவதா Dஊடாக Bயை அடைவதா தூரம் குறைவு....
22. Aயிலிருந்து புறப்பட்ட சுற்றுலாப் பயணிகள் B-D-C ஊடாக மீண்டும் Aயை அடைந்தால் அவர்கள் பயணம் செய்த தூரம் எத்தனை k.m..................................
23. இப் பயணத்திற்கு 34 l டீசல் செலவாகியது எனின் 1 l டீசலில் அந்த வாகனம் எத்தனை kmசென்றிருக்கும்..............................................
24. 1 l டீசலின் விலை 65.00எனின் பயணத்துக்காகச் செலவாகிய டீசலின் மொத்த விலை என்ன?
25. மணிக்கு 30km வேகத்தில் மோட்டார் சைக்கிளில் புறப்பட்ட கண்ணன் Cயிலிருந்து Dயை பி.ப 1.20மணிக்கு அடைந்தான். வழியில் 1மணித்தியாலம் ஓய்வெடுத்தான். அவன் எத்தனை மணிக்குத் தனது பயணத்தை ஆரம்பித்திருப்பான்.........................

**மாறிக்கிடக்கும் வசனங்களை ஒழுங்கு படுத்தினால் வருகின்ற சரியான சொற்களின் இலக்கங்களை வெற்றுக் கூட்டில் எழுதுக.**

26. 1)பழங்களை/ 2) இனிய/3)உண்பாள்/4) அவள்/ 5)விரும்பி

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

27. 1)வாசிப்போம்/ 2) நாங்கள்/ 3) புத்தகங்களை/ 4) சென்று/ 5) நூலகம்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

28.காய், பூ, இலை என்பனவற்றை உணவாக உட்கொள்ளும் தாவரம்
1. கோவா 2. முருங்கை 3. அகத்தி

29. விரைவில் இனப் பெருக்கம் செய்யும் உயிரினம் ஒன்று
1. நுளம்பு 2. தேனீ 3. கறையான் 4. பேன்

30.தொற்று நோய் அல்லாத ஒரு நோய்
1. புற்றுநோய் 2. எயிட்ஸ் 3. டெங்குக் காய்ச்சல் 4. சிரங்கு

31. ஒரு கடின உழைப்பாளியின் கை எப்போதும்
1. பளபள 2.கணகண 3.சொரசொர 4.மெதுமெது என இருக்கும்


32. மதுபானம் பெறமுடியாத தாவரம்
1. தென்னை 2. பனை 3. கித்துள் 4. கமுகு

**சிந்து வர்த்தக நிலையத்தின் விலை விபரம் கீழே தரப் பட்டுள்ளது அதை அவதானித்து 33-40 வரையான வினாக் களுக்கு விடை எழுதுக.**

| | | ரூபா | சதம் |
|---|---|---|---|
| 1 kg | அரிசி | 70 | 00 |
| | பருப்பு | 140 | 00 |
| | சீனி | 68 | 00 |
| | சர்க்கரை | 90 | 00 |
| 1 m | பொலித்தீன் | 30 | 00 |
| | நைலோன் கயிறு | 22 | 00 |
| 1 L | தே.எண்ணெய் | 210 | 00 |
| | ந.எண்ணெய் | 240 | 00 |

33. 3 kgஅரிசியும் 4.5m நைலோன் கயிறையும் வாங்கிய கோமதி எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் ?
34. 250mlதேங்காய் எண்ணெய்யின் விலை என்ன?
35.ஒரு மூடையில் 50kg சர்க்கரை உண்டு எனின் 2 மூடை சர்க்கரையின் விலை என்ன?
36. 200ml நல்லெண்ணையின் விலை என்ன ?
37. ஒரு கிலோ பருப்பு10 பைக்கட்டுக்களில் அடைக்கப்பட்டால் ஒரு பைக்கட்டின் விலை என்ன?
38. 50m பொலித்தீனைக் கொள்வனவு செய்த சில்லறை வியாபாரி 500ரூபா பணத்தையும் மிகுதியைக் காசோலையாகவும் கொடுத்தால் காசோலையாக வழங்கப் பட்ட பணம் எவ்வளவு?
39. திருமண வீடொன்றிற்கு 40kg அரிசியும் 10kgபருப்பும் 12kgசீனியும் 4l தேங்காய் எண்ணெயும் வாங்கினால் வியாபாரிக்கு செலுத்த வேண்டிய மொத்தப் பணத் தொகை எவ்வளவு?
40. ஒரு மீற்றர் பொலித்தீனில் 25 சிறிய பருப்புப் பைக்கற்றுகளைப் பொதி செய்யலாம் 250 பொதிகளைச் செய்வதற்கு எவ்வளவு பணம் தேவை ?

**தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக பிழையான விடைகளை வெட்டி விடுக**





41. தொகுதி A
ஒளிரும்
ஒளிராது

42. தொகுதி B
ஒளிரும்
ஒளிராது


43. தொகுதிC
ஒளிரும்
ஒளிராது

**கீழே தரப்பட்டுள்ள உருக்களிலுள்ள கோலங்களை நன்கு அவதானித்து வெற்றுக் கூட்டுக்குள் பொருத்தமான எண் கூட்டங்களின் கீழ்க் கோடிடுக.**

| | | | |
|---|---|---|---|
| 7 | 4 | 2 | 5 |
| 5 | 2 | | 4 |
| 3 | | 4 | 6 |
| 3 | 7 | 5 | 3 |




| | | | |
|---|---|---|---|
| 5 | 10 | 15 | 20 |
| 7 | | 19 | 25 |
| 9 | | | 30 |
| 11 | 19 | 27 | 35 |




**தரப்பட்ட சிங்கள வசனங்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.**

46. மம ஹெதர யனவா.......................
47. தாத்தா நாண்ட கியா..........................

**தரப்பட்ட தமிழ் வசனங்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

48.நிமால் தயவு செய்து இங்கே வா.................................
49.இது என்னுடைய புத்தகம்

**சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக**

50. சில தாவரங்கள் ஒட்சிசனையும் சுவாசிக்கும்
51. அயடின் கலந்த உப்பையே நாம் பயன்படுத்த வேண்டும்
52. வட மாகாணத்தின் தலை நகரம் வவுனியா
53. கச நோய் தொற்று நோயாகும்
54. வான வில்லில் ஆறு நிறங்கள் உண்டு

**55.-60 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கதையை உமது வசன நடையில் தொடர்ந்து 5 வசனங்கள் எழுதுக.**

ஒரு நாள் இரண்டு நாய்க் குட்டிகள் பந்து ஒன்றைக் கண்டன நல்ல நண்பர்களாக இருந்த இருவரும் பந்து தமக்கே எனச் சண்டையிடத் தொடங்கின.

# பாடசாலை மட்ட

## Education Sector Development Frame work on Programme

(நேற்றைய தொடர்ச்சி)

**அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அவர்களுடன் வடக்கின் கல்விச் செயற்பாடு பற்றி கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலின் முக்கிய பகுதிகள் இங்கு தொகுத்து தரப்படுகின்றன.**

**ஆ-ர்**

### கல்வியின் தரம்

பாடசாலை மட்ட உயர்கல்வி செயற்பாடுகள் (ESDFP) இன் செயல் திட்டத்தில் இரண்டாவது முக்கிய விடயமாக அமைவது கல்வியின் தரத்தைப் பேணுதலாகும்.எல்லா மாணவர்களும் உரிய தேர்ச்சியைப் பெற வேண்டும்.அதேநேரம் தேர்ச்சியோடு சம்பந்தப்பட்ட பயிற்சிகளை ஆசிரியர்கள் பெற்றிருக்கவேண்டும் என்பது கல்வித்தரத்தினை அடைவதற்கான முக்கிய விடயப் பொருளாகக் கருதப்படுகின்றது.

கற்கின்ற ஒவ்வொரு மாணவருக்கும் கற்றலோடு சம்பந்தப்பட்ட வளங்கள் வகுப்பறையில் இருக்கவேண்டும். இதற்காக குணநல உள்ளீடுகள் கொள்வனவின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் மாணவர் தொகைக்கேற்ப உரிய அட்டவணைப்படி நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிதியானது அழி பொருட்களையும் மூலதனப் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படுகின்றது.

பல பாடசாலைகளில் இத் தொழிற்பாட்டில் பின்னடைவு உள்ளது. கற்றல் கற்பித்தல் நடைபெறும்போது தேவையான மூலதனப் பொருட்களோ அழிபொருட்களோ, வகுப்பறைக்கு செல்வதில்லை. பயன்படுத்துவதில்லை.எந்தப் பாடசாலை இந் நிதியை சரியான முறையில், வகுப்பறையில் பயன்படுத்துகின்றதோ அந்தப் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் உரிய தேர்ச்சியைப் பெற்று தமது பெறுபேறுகளில் உயர்நிலை அடைவர்.

2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி இது தொடர்பான கணக்கெடுப்பை மேற்கொண்டபோது பல பாடசாலைகளில் இந்நிதி மீதமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இடைநிலைக் கல்வி நவீன மயமாக்கல் (SEMP) செயற்திட்டத்தில் கடந்த வருடம் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு நிதி வழங்கப்பட்டது.

எனினும் அந்தவருடத்தில் குறித்த நிதியைப் பயன்படுத்தாத பாடசாலைகளுக்கு இம்முறை இந் நிதி வழங்கப்படவில்லை. இத்தகையதோர் துரதிர்ஷ்ட நிலை குணநல உள்ளீட்டிற்கும் ஏற்படக் கூடாதென்பதே எமது விருப்பம். இந்த உண்மையை சரியான முறையில் புரிந்துகொண்டு பாடசாலை முகாமையாளர்களும், ஆசிரியர்களும் தொழிற்படுவார்களாயின் இப்பிரச்சினை இலகுவாக தீர்க்கப்படுவதுடன் பாடசாலைகளும் மேம்பாடடையும்.

2008ஆம் ஆண்டு தொடக்கத்தில் குணநல உள்ளீட்டு பிரயோகம் தொடர்பான கண்காணிப்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ளோம்.

வங்கிக் கணக்கிணக்க கூற்றின் அடிப்படையில் ஒவ்வொரு மாத முடிவிலும் செலவு விபரங் கள் சேகரிக்கப்படுகின்றன. கால் ஆண்டிற்கு ஒருமுறை சகல பாடசாலைகளினதும் செலவுத் தொகுப்பு மாகாணக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

# உயர்கல்விச் செயற்பாடு

இதனூடாக குணநல உள்ளீட்டு நிதியின் பிரயோகத்தை அவதானிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

குணநல உள்ளீடு தொடர்பான சுற்று நிருபங்கள் மூலம் பாடசாலைகள் எந்தெந்தப் பொரு ட்களை வேண்டமுடியும் என்பது வரைறுக்கப் படுகின்றது. இதன் பிரகாரம் பாடசாலைகள் தொழிற்படவேண்டும்.

**வலயமட்ட செயலமர்வுகளுக்குப் பதிலாக பாடசாலை மட்ட செயலமர்வுகளே நடத்தப்படும். இதில் பயிற்சி தேவையான ஆசிரியர்களை மட்டும் செயலமர்வுக்கு அழைப்பதே நடைமுறையாகும்.**

க.பொ.த உயர்தரம் உள்ள பாடசாலைகள் இரசாயனப் பொருட்களை கோருகின்றன. இவற்றை குணநல உள்ளீட்டிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியாது.

### பாடசாலை மட்ட செயலமர்வு

பொதுவாக செயலமர்வுகள் வலயத்தால் நடத்தப்படுவது வழமை. சென்ற வருடத்திலிருந்து இவ் வழமைக் கலாசார முறை படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது. செயலமர்வை நடத்துவதற்கு பாடசாலைகளுக்கு கூடியளவு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

இதற்காக வலயங்களுக்கு வழங்கப்படும் நிதியின் பெரும் பகுதி ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் வழங்கப்படும். ஒரு ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடும்போது அவரால் கற்பிக்கப்படும் பாட அலகுத் தொடர்பில் மதிப்பீட்டுக் குழு பலவீனங்களைக் காணுமாயின் குறித்த ஆசிரியரிற்குமட்டும்விசேடவளவாளர்களை அழைத்து ஒருமணித்தியாலம் அல்லது 2 மணித்தியாலம் ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.

இதனூடாக குறித்த விடயத்தில் குறித்த ஆசிரியர் ஓரளவு புலமை பெறுவதோடு மாணவர்களும் அதனூடாக நன்மையடைவர். இதுவரை பாடசாலைகள் தவறான விளக்கத்துடன் இச் செயலமர்வுகளை நடத்தியிருந்தால் அதனைத் திருத்தி இவ் அறிவுறுத்தலுக்கு அமைய தொழிற்படுமாறு சகல அதிபர் களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வலய ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கும் தங்கள் மேற்பார்வையின் போது குறித்த பாட விடயத்தில் சில ஆசிரியர்களுக்கு பிரச்சினை இருந்தால் அவர்களுக்கு மட்டும் அந்த விடயத்தில் செயலமர்வை நடத்தலாம்.

இச் செயலமர்விற்கு குறித்த பாடத்தை கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் அழைக்க வேண்டியத்தில்லை. இங்கு ஆசிரியர் தொகை முக்கியமல்ல.

அவர்கள் அறிய வேண்டிய விடயம் தான் முக்கியமானது. இதன்பிரகாரம் செயற்படுமாறு சகல வலயங்களுக்கும் அறிவிக் கப்பட்டுள்ளது.

ஆசிரியர் செயலமர்வு போன்று பாடசாலைகளில் மாணவர்களின் திறன் விருத்தியை மேம்படுத்துவதற்காக சகல பாடசாலைகளுக்கும் பாடசாலை மட்ட உயர்கல்வி செயற்பாடுகள் (ESDFP) செயற் திட்டத்திலிருந்து நிதி விடுவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பாடசாலையும் இந் நிதியைப் பயன்படுத்தி ஏற்கனவே தங்கள் மாணவர்கள் பெற்றுக்கொண்ட திறன் விருத்தியை வலுப்படுத்தலாம்.

புதிய திறன் விருத்திக்கும் இந்நிதியைப் பயன்படுத்தலாம். உதாரணமாக விளையாட்டுத் துறைப் பயிற்சி ஆங்கில அறிவை வளப்படுத்தல் போன்றவற்றிற்கு இந்நிதியைப் பயன்படுத்த முடியும்.

கல்வித்தர விருத்திக்குஇடைநிலைக் கல்வி நவீனமயமாக்கல் திட்டம் (SEMP), பாடசாலை மட்ட உயர்கல்வி செயற்பாடுகள் (ESDFP) போன்ற செயற் திட்டங்கள் மூலமும் வேறுசில செயற்திட்டங்களும் அமுலில் உள்ளன.

அவற்றில் (GTZ) நிதி உதவியுடன் (Besu) செயற்திட்டம், ஜப்பானிய நிதி உதவியில் "ஜெய்க்கா" செயற்திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் "நிக்கொட்" (NECORD) போன்ற செயற் திட்டங்களும் அமுலில் உள்ளன. இவை அனைத்தும் கல்வித் தர விருத்தியை அடிப்படையாகக் கொண்டவை.



### விடயம் நான்கு

பாடசாலை மட்ட உயர்கல்விச் செயற்பாடுகள் (ESDFP) செயற்திட்டம் 5 விடயப் பொருளைக் கொண்டது.

இதில் நான்காவது விடயம் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கும் இயலளவு விருத்தி செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை அளிப்பதாகும்.

முகாமைத்துவ செயற்பாடுகளில் PSI (Programme School improve) நிகழ்ச்சி செயற்திட்டம் முக்கியமானது.

இதுவரை காலமும் ஆசிரியர்களுடைய வாண்மை விருத்திக்கும் மாணவர்களின் திறனடைவு மட்ட மேம்பாடுகளுக்குமே கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டது. முகாமைத்துவத்தில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

ஆனால், PSI முகாமைத்துவ திறன்களை விரிவடையச் செய்வதற்கும் சமுதாயத்தை பாடசாலையுடன் இணைத்து செயற்படுவதற்கும் ஏற்றவகையில் வழிப்படுத்துகிறது. இத்திட்டம் சரியான முறையில் தொழிற்படும்போது பாடசாலையும் சமூகமும் பயனடையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

PSI 2006 ஆம் ஆண்டு வவுனியா தெற்கு வலயத்திலும் 2007 இல் மன்னார் வலயத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் வவுனியா வடக்கு வலயத்திலும் வலிகாமம் வலயத்திலும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இவற்றின் செயற்பாடுகளை வலுவாக்க தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்படுவார்.

**சந்திப்பின் தொகுப்பு**
**என்.விஜயசுந்தரம்**

### யாழ்ப்பாணத்தின் கல்வி

வடக்கு மாகாணம் முரண்பாட்டு நிலைக்கு (Conflict) உட்பட்ட பகுதியாகக் காணப்படுகின்றது.

எனினும் யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை உயர்பெறுமானத்தைக் கொண்டிருப்பது மனதிற்கு ஆறுதல் தருவதுடன் இக்கட்டான சூழ்நிலையிலும் கல்விக் கட்டமைப்பை கட்டிக் காக்கும் பணி பாராட்டுதற்குரியது.

குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்கள் இடர்பாடுகளை எதிர்கொண்டு கல்வியில் சாதனை படைத்துள்ளனர். இது பாராட்டுதற்குரியதாகும். (முற்றும்)

# முஸ்லிம் அமைச்சர்களுக்கு தன்மானம் இருந்தால் பதவி விலகட்டும் -ஹசன் அலி சவால்

கிழக்கு மாகாணசபை முதலமைச்சராக ஹிஸ்புல்லாவை நியமிக்காது விட்டால் எல்லா முஸ்லிம் அமைச்சர்களும் பதவி விலகப் போவதாக அரசை மிரட்டியிருந்தனர். ஆனால் அரசு அந்த மிரட்டலுக்கு செவிசாய்க்கவில்லை. எனவே தன்மானம் இருந்தால் முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகட்டும் என்று முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தமது பதவிகளைத் தூக்கி எறியப் போவதாக முஸ்லிம் அமைச்சர்கள் தெரிவித்த போதும் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. எனவே தன்மானம் இருந்தால் பதவி விலகட்டும் என்று நான் அவர்களுக்கு சவால் விடுக்கின்றேன். அவர்களுக்கு தன் மானம் இல்லாத தால் தான் அரசின் சலுகைகளுக்கும், பதவிகளுக்குமாக அவர்கள் அரசுடன் ஒட்டிக்கொண்டு இருக்கின்றனர்.

ஹிஸ்புல்லா உட்பட எல்லா முஸ்லிம் அமைச்சர்களும் அரசினால் கொண்டு வரப்பட்டவர்கள். எனவே அவர்கள் ஒருபோதும் பதவி விலகமாட்டார்கள். பதவி இல்லை என்றால் அவர்கள் ஏதுமற்றவர்கள் ஆகிவிடுவார்கள். எனவே அவர்கள் பதவி விலகப் போவதில்லை. இந்த சமயத்தில் தான் நாம் வேறுபட்டவர்கள் என்பதனை புலப்படுத்தி உள்ளோம். நாம் அரசில் இருந்து வெளியேறினோம், மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற பதவிகளையும் துறந்தோம்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ஹிஸ்புல்லாவுக்கு முதலமைச்சர் பதவியை வழங்குவதாகக் கூறிய அரசு, பின்னர் பிள்ளையானை முதலமைச்சராக்கி விட்டது. அரசின் அரசியல் விளையாட்டுக்களை நாம் அறிவோம். எனவே தான் அரசில் இருந்து சரியான தருணத்தில் வெளியேறியிருந்தோம் என்றார் அவர். (அ-5)

# இலங்கையில் 'செய்மதி' நிறுவ நடவடிக்கை

இலங்கையில் முதலாவது செய்மதி நிறுவ இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு முதல் கட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. இதனைப் பதிவு செய்வதற்காக இரு பொறியியலாளர்கள் ஜெனிவாவிலுள்ள சர்வதேச தொலைத்தொடர்புகள் சங்கத்துக்கு சென்றுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பிரிய்ந்த காரியப் பெரும தெரிவித்துள்ளார். ஆசியப் பிராந்தியத்தில் செய்மதி வலையமைப்பு இல்லாத நாடுகளில் இலங்கையும் ஒன்று எனத் தெரிவித்த காரியப் பெரும அந்தவகையில் 50 ஆண்டுகள் பின்னிற்பதாக தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த கால எல்லை குறிப்பிடப்படாவிட்டாலும் இரு ஆண்டுகளுக்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும் எனத் தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார். இந்த செய்மதி எங்களுடைய தொடர்பாடல் தேவைகள் பூர்த்தி செய்ய உதவுவதுடன் 'சார்க்' அமைப்பு நாடுகளுடனும் தகவல்களை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்புக்களையும் வழங் கும் என அவர் தெரிவித்தார். (அ-5)

# கோதுமை மா தொழிற்சாலை கொழும்பில் திறக்கப்படும்

புதிய கோதுமை மா தொழிற்சாலை ஒன்று எதிர் வரும் 26ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. செரண்டிப் தனியார் நிறுவனம் கொழும்புத் துறை முகத்திற்கு அருகில் இத் தொழிற்சாலையை அமைத்துள்ளது. இங்கு நாளாந்தம் 10ஆயிரம் மெற்றிக்தொன் கோதுமை மா உற்பத்தி செய்யப் படவுள்ளது. செரண்டிப் நிறுவனம் சுமார் 6நாடுகளில் இவ்வாறான தொழிற்சாலைகளை நடத்தி வருகிறது. கோதுமை மா விநியோகத்தின் ஏக போக உரிமை இதன் மூலம் இல்லாமல் போகும் என நம்பப்படுகிறது. இந்த தொழிற்சாலையின் மூலம் கூடுதலான தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படவுள்ளன. (அ)

பயில்வானின் போர்த் தந்திரத்தை பின்பற்றுவது முட்டாள்தனம்

-இலங்கை

வலம்புரி

# இலங்கை மீது விழுந்த சர்வதேச சமூகத்தின் அடி

ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபையில் உறுப்புரிமை பெறுவதற்கான தேர்தலில் இலங்கை தோல்வி கண்டுள்ளது.

இந்தியாவும்,சீனாவும் எம்மைக் கைவி டாது. இலங்கை உறுப்புரிமையைப் பெறுவது உறுதியென வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்திருந்தார்.

ஆனால் இலங்கை அரசின் எதிர்பார்ப்பிற்கு மாறாக, ஐ.நா. சபையின் மனித உரிமை சபையில் உறுப்புரிமை பெறும் தகுதியை இலங்கை இழந்துள்ளது.

இது இலங்கைக்கு பெருத்த அவமானம் ஆகும். அத்துடன் இலங்கையில் மனித உரிமை மீறல் இல்லை-இங்கு இனப்பிரச்சினையே இல்லை என கூறும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு விழுந்த பலத்த அடியாகும்.

ஐ.நா சபையின் மனித உரிமைகள் சபையில் அங்கத்துவம் பெறும் தகுதியை இலங்கை இழந்திருப்பதன் மூலம் இலங்கையில் நிகழும் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கு ஏற்பட்ட இந்த அவமானம் வேறோர் ஜனநாயக நாட்டில் ஏற்பட்டிருக்குமாயின், அரசு பதவி விலகும் சம்பவங்கள், அமைச்சர்களின் இராஜினாமாக்கள் என அந்த நாட்டில் ஒரே களேபரம் நடந்தேறும். எதிர்க்கட்சிகள் கோசமிடும். மீண்டுமோர் தேர்தலுக்கு வழிவகுக்கும். ஆனால் இலங்கையில் இவையெல்லாம் சர்வ சாதாரணம்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களை அனுப்பி வைத்துக் கொண்டு, உள்நாட்டில் யுத்தம் புரியும் போக்குடையவர்களுக்கு மனித உரிமைகள் சபையில் அங்கத்துவம் கிடைத்தாலும் - கிடைக்காமல் விட்டாலும் எல்லாமே ஒன்றுதான்.

அப்படியாயின் சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கிய அடியின் தாக்கம் என்ன என்ற கேள்வி எழுமாயின், அது இலங்கைக்கு உதவிவரும் நாடுகளின் நிலைப்பாட்டை மாற்றியமைக்கும் என்ற பதிலையே முன்வைக்க முடியும்.

அதாவது இலங்கை மனித உரிமைகள் சபையின் உறுப்புரிமையை இழந்தமையால், அந்த நாட்டில், மனித உரிமை மீறப்படுவது உறுதி செய்யப்பட்டு விட்டது.

எனவே மனித உரிமை மீறலில் ஈடுபட்டுள்ள நாட்டிற்கு ஆயுத மற்றும் இராணுவ உதவிகளை எந்தவொரு நாடும் வழங்குமாயின் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கு, அந்த நாடுகள் உதவி வருவதான குற்றச்சாட்டுகள் எழுவதுடன், அது சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பிற்கும் ஆளாகும்.

ஒட்டு மொத்தத்தில் இலங்கை சர்வதேசத்தால் ஒதுக்கப்படும் பரிதாபத்திற்கு உட்படும்.

# ஐ. நா மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவம் கிடைக்காமை சர்வதேச உதவிகளை பாதிக்காது

## மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில்இலங்கைக்கு அங்கத்துவம் கிடைக்காமையானது மனித உரிமைகளை இலங்கை சரியாகப் பேணவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்ற போதும் இலங்கைக்கான உதவிகளில் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது என மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உறுப்புரிமையை இழந்திருப்பதால் இலங்கைக்கான உதவிகளில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப்போவதில்லையென அவர்கள் கூறுகின்றனர்.

இதன் மூலம் சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கை தொடர்பான நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர் சர்வதேச நாடுகளும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கைக்கான உதவிகளை வழங்குவதில் பின்னிற்கலாம் என்றும், ஆனால் முற்றாக உதவிகளை நிறுத்துவார்கள் என அச்சமடையத்தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்புபட்ட மனித உரிமை விவகாரங்களில் சம்பந்தப்படும் போது இலங்கை பல்வேறு சவால்களைச் சந்திக்க வேண்டியேற் படும் எனக்குறிப்பிட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் எவராவது ஐ.நாவின் முக்கிய பதவிகளுக்குப் போட்டியிடும் போது இந்த விவகாரம் அவர்களின் வெற்றியில் பாதகமானவிளைவுகளை ஏற் படுத்தும் எனவும் குறிப்பிட்டார்.

இதன்பின்னரும் இலங்கை மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவத்தைப் பெறவேண்டுமாயின் மனித உரிமைகளைப் பேணுவதை உறுதிப்படுத்திக் காட்டவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.


ஐக்கியநாடுகள் சபையில் அங்கத்துவம் கிடைக்காமையானது எந்தவொரு தரப்பும் வெற்றி பெற்றதாகவோ , தோல்வியடைந்ததாகவோ அர்த்தப்படாது எனக் குறிப்பிட்ட அவர் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து மனித உரிமை களைப் பாதுகாக்க முன்வரவேண்டும் என்பதையே வலியுறுத்தி நிற்பதாகவும் குறிப்பிட்டார்.

(அ-5)

# காணாமல் போனோர் தொடர்பான ஐ. நா குழுவிடம் அரசு பொய் கூறியுள்ளது என்கிறார் மனோ கணேசன்

(கொழும்பு)

ஜயகாந்தன் ராமநாதன் எனும் இளைஞர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பலவந்தமாக காணாமல் செய்யப்பட்டவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயுற்குழுவிடம் அரசு பொய் கூறியுள்ளதாக மக்கள் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டாளர் மனோ கணேசன் குற்றம் சாட்டியுள்ளார். அதனை நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சியங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஜயகாந்தன் ராமையா எனும் 25வயது மலையகத்தமிழ் இளைஞர் கொழும்பு -கண்டி நெடுஞ்சாலையில் அமைந்திருக்கும் கடவத்தை நகரில் வைத்து வெள்ளைவானில் வந்த இரகசியப் பொலி ஸாரால் கடத்தப்பட்டார். இது குறித்து கடத் தப்பட்டவரின் சகோதரர்2007 மார்ச் 22 ஆம் திகதி கடவத்தை பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக காணாமல் செய்யப்பட்டவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயற்குழுவுக்கு 2007 ஏப்ரல்4 ஆம் திதி அறிவித்தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால்இந்தச் சம்பவம் தொடர்பான முறைப்பாட்டை பலவந்தமாக காணாமல் செய்யப்பட்டவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயற்குழுவிடம்இலங்கை நிராகரித்துள்ளதுடன் குறித்த பெயருடைய எவரும் இரகசியப்பொலிசாரினால் கைது செய்யப்படவில்லை எனவும் இலங்கை கூறியுள்ளதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.(அ-5)

# அரசாங்கத்தின் யுத்த முன்நகர்வுகளுக்கான காரணம் ஏற்றுக்கொள்ள முடியாதது

## சர்வதேச ஜூரிகள் பேரவை தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வொன்றிற்கான பின்னணியை உருவாக்குவதற்காகவே யுத்தம் மேற்கொள்ளப்படுகிறது என்ற இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு ஏற்றுக் கொள்ள முடியாதென சர்வதேச ஜூரிகள் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை பாதுகாப்பு முறைமை சரியான முறையில் முன்னெடுக்கப்படவில்லையென அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது. இலங்கையில் ஏற் பட்டுள்ள பாரிய மனித உரிமை மீறல் சீரழிவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பாளிகள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாது காப்பு மற்றும் பயங்கரவாத காரணங்களினால் இலங்கையின் சட்டம் ஒழுங்கு சீரிய முறையில் அமுல் படுத்தப்படுவதில்லை என அந்த அமைப்பு தெரவித்துள்ளது.

சர்வதேச ஜூரிகள் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதூர் அக்ஸன் பெய்ம் தன்னார் வத்தொண்டர் கள்மற்றும் திருகோணமலை மாணவர்கள் படுகொலை போன்ற சம்பவங்கள் தொடர்பாக நியாயமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை . அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கண் காணிப்பகமொன்று அமைக்கப்பட வேண் டியதன் அவசியம் தொடர்பாக மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-5)

# வெள்ளி நற்சிந்தனை 21

# பக்தியின் மொழி தமிழ்

குழந்தைப்பருவம் வாழ்க்கையின் முதற்பருவம். அப்பருவத்திலே பார்க்கின்ற எல்லாப் பொருள்களிலும் விருப்பம் ஏற்படும். அதை அடுத்துவரும் இளமைப் பருவம் ஓர் இனிமையான பருவமாகும். அழகாகத் தோன்றவேண்டும் என்ற அவாவுடைய காலம். அதுமட்டுமல்ல அழகான தோற்றத்தால் பெரிதும் ஈர்க்கப்படும் பருவமுமாகும். கவர்ச்சியும் தோற்றப் பொலிவும் தான் வாழக்கைக்கு இன்றியமையாதவைஎன எண்ணிவாழும்காலமும் இதுவே. இந்த எண்ணம் மனித வாழ்க்கையைச் சில வேளைகளில் சிறுமைப்படுத்தி விடும்.

உண்மையான அழகை எல்லோரும் உணரவேண்டும். அதனை எங்கே காண்பது? இயற்கையின் தோற்றத்திலா அல்லது செயற்கையான செயற்பாட்டிலா? இன்று பலர் குழம்பி நிற்கும் விடயம் இது. குறிப்பாக இளமையான தோற்றமே நிரந்தரமான அழகு எனப் பலர் கருதுகின்றனர். முதுமையை மறைக்க முகப்பூச்சுகளை நாடுகின்றனர். பெண்மையும் ஆண்மையும் இச் செயற்பாட்டில் பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றன.

இளைஞரான சம்பந்தர் உண்மை யான அழகு எங்கேயுள்ளது என்பதைத் தமது பாடல்களிலே நயமாகப் பதிவு செய்துள்ளார். நம்மைச் சூழவுள்ள இயற்கையின் தோற்றத்தில் இருக்கும் அழகை எடுத்துக் காட்டுகிறார். பல திருத்தலங்களை வழிபடச்சென்ற சம்பந்தருக்கு தலங்களின் அமைவிடம் கவர்ச்சியை ஏற்படுத்துகிறது. பார்வையில் பட்ட இடமெல்லாம் அழகாய்த் தோன்றுகிறது.தான் கண்டு மகிழ்ந்த இயற்கைக் கோலங்களை மற்றவரும் காண வேண்டும் என விழைகிறார். கற்பனையி லாவது அக்கோல அழகைக் காணப்பாடலாகப் பாடியுள்ளார்.

**கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்**

செந்நெல் விளைந்த செழிப்பான வயலருகே அமைந்த திருக்கோயில் வளமான புன்னை மரங்கள் பூத்து நிற்கும் கோலம் வெண்ணிறத் திரைச் சீலையில் பவளம் பதித்தது போன்ற தோற்றம். பூந் தராய் திருத்தலத்தின் சூழல் சம்பந்தரைப் பரவசப்படுத்துகிறது. கோயிலின் உள்ளே செல்கிறார். இறைவன் தோற்றத்தை உற்று நோக்குகிறார். இமையவர் விரைந்து வந்து தம் முடி தாழ்த்தி வழிபடும் கழல் அணிந்த அழகிய திருவடிகள் கண்ணில் படுகின்றன. இறைவனை முழுமையாகக் கண்களால் பணிகிறார். பின்னிக் கிடக்கும் சிவந்த சடையிலே உள்ள இளம்பிறையும் பாம்பும் அவர் கண்களைக் கவர்கின்றன. இது எப்படி? இறைவனிடமே கேட்கிறார். வானத்தில் துலங்கும் பிறையையும் பற்றையில் வாழும் பாம்பையும் ஏன் வைத்திருக்கிறீர்.சம்பந்தரின் இளவயது இயற்கையை ரசித்தாலும் இங்கே இறைவனும் செயற்கையழகை நாடுபவனோ எனப்பாடுகிறார்.

"செந் நெலங்கழனிப் பழனத்தயலே
செழும்
புன்னை வெண் கிழியிற் பவளம் புரை
பூந்தராய்
துன்னி நல்லிமையோர் முடிதோய்
கழலீர் சொலீர்
பின்னு செஞ்சடையிற் பிறை
பாம்புடன் வைத்ததே"

# கிழக்கு மாகாண அமைச்சராக ஹிஸ்புல்லா சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் அமைச்சராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டு இனங்களுக்கிடையே சுமுகமான உறவு நிலவ வேண்டும் என கிழக்கு மாகாணத்தின் அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்திருக்கின்றார்.

கிழக்கு மாகாணத்தின் சுகாதாரம், சுதேச மருத்துவம்,சமூக சேவைகள்,சமூக நலன், சிறுவர் நன் நடத்தை,மகளிர் விவகாரம், இளைஞர் அலுவலக விவகாரம், விளையாட்டுத்துறை, வேலை வாய்ப்பு, தகவல் தொழில் நுட்பவியல், கல்வி, கூட்டு அபிவிருத்தி, உணவு வழங்குதல் சம்பந்தமான அமைச்சராக தன்னை ஜனாதிபதி நியமித்திருப்பதாகக் ஹிஸ்புல்லா ஊடகங்களுக்குக் கூறினார்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் ஹிஸ்புல்லா பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம, அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் கருஜெயசூரிய , ஏ.எச்.எம்.பௌசி மற்றும் அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஜவாகர் சாலி மற்றும் முகமட் சுபைர் ஆகியோரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களாக நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டே தாம் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தீர்மானித்ததாகக் ஹிஸ்புல்லா தெரிவித்தார். கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டு இனங்களுக்கிடையே சுமுகமான உறவு நிலவ வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 3 தினங்களில் தனது பணியை ஆரம்பிக்கவுள்ளதாகவும் மேற்படி அமைச்சுக்களின் ஊடாக சிறப்பான சேவையை கிழக்கு மாகாண மக்களுக்கு வழங்க விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

# செயலமர்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்காக நாளை ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செயலமர்வு தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (ச)

# அஞ்சல் அதிபர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுடன் இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் அதிபர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் இன்று காலை 10 மணிக்கு யாழ்.பிரதி அஞ்சல் மாஅதிபர் அலுவலகத்தில் பிரதி அஞ்சல் மாஅதிபர் வீ.குமரகுருவைச் சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தேர்வு செய்யப்பட்டு, அஞ்சல் அதிபர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 34 பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் காலதாமதமாகக் கிடைத்தமையால் அப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க முடியவில்லை.

இதனால் அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடாத்துவது தொடர்பில் அஞ்சல் மா அதிபரிடமிருந்து புதிய திகதி ஒன்றைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக விசேட சந்திப்பு ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். பிரதி அஞ்சல் மாஅதிபர் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளமையால் அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகள் அனைவரையும் வருகை தருமாறு யாழ்.பிரதி அஞ்சல் மாஅதிபர் வீ.குமரகுரு கேட்டுள்ளார். இதேவேளை மேற்படி அஞ்சல் அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த 16 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# சர்வதேசம் தடைகளை விதித்தாலும் புலிகளுக்கு எதிரான போர் தொடரும்

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேசம் எத்தகைய தடைகளை விதித்தாலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் தொடரும் என்று அமைச்சர் அநுரபிரிய தர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதே அரசாங்கத்தின் முன்பாகவுள்ள பாரிய பொறுப்பு.அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் பின் நிற்காது.

குறிப்பாக சர்வதேச சமூகம் எத்தகைய தடைகளை விதித்தாலும் புலிகளுக்கு எதிரான எமது போர் தொடரும்.

இலங்கையிலுள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இலங்கை அரசுக்கு எதிராக கடுமையான பிரசாரங்களை முன்னெடுத்தன. ஐக்கிய தேசியக் கட்சியும் இத்தகைய பிரசாரங்களை முன்னெடுத்தது. இவை அனைத்தும் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள்தான்.

தென்னாபிரிக்காவின் டெஸ்மன் டுட்டு. அமெரிக்காவின் ஜிம்மி காட்டர் ஆகியோர் இலங்கை தொடர்பான பிழையான தகவல்களைக் கொடுத்துள்ளனர் என்றார். (ச-5)

## ஐக்கிய நாடுகள் தேர்தலில்...

நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது;

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதனை வாக்களிப்புக்குத் தகுதியான 192 நாடுகளில் எமக்கு வாக்களித்த 101 நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்தத் தெரிவு 2011 ஆம் ஆண்டு வரை செல்லுபடியானதாகும். இலங்கையைப் பொறுத்தமட்டில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தமை மட்டுமல்லாது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பாரிய அழுத்தங்களுக்கு மத்தியிலேயே இந்தத் தேர்தலில் நாம் போட்டியிட்டு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பெற்ற வாக்குகளுக்கு அண்ணளவான வாக்குகளைப் பெற்றுக்கொண்டோம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவைக்கு இலங்கை தெரிவு செய்யப்படாத போதிலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் மற்றும் அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் என்றார். (ச-5)

## இமாலய வெற்றிகள் பலவற்...

வற்றுக்கு நடுநாயகமாக நின்று எமது சண்டை அணிகளையும் மரபுப் படையணிகளையும் வழிப்படுத்தி, நெறிப்படுத்தி சமராடிய எமது வீரத் தளபதி இன்று எம்முடன் இல்லை.

இவரது இழப்பால் எமது தேசம் ஆற்ற முடியாத துயரத்திலும் ஆழ்ந்த வேதனையிலும் இன்று மூழ்கிக் கிடக்கின்றது. பொதுவாகவே விடுதலை இலட்சியத்தில் பிடிப்பு ஏற்பட்டு விட்டால், எமக்குத் துன்ப துயரங்கள் தெரிவதில்லை; வேதனைகள் புரிவதில்லை; உடல் உபாதைகள் அழுத்துவதில்லை; இயற்கை கூட குறுக்கே நிற்பதில்லை.

எனது அன்புத் தளபதி பிரிகேடியர் பால்ராஜுக்கும் அப்படித்தான். ஓயாது குமுறும் சமர்க்களங்களையெல்லாம் அவன் ஓய்வில்லாது, உறக்கமில்லாது எதிர்கொண்டான். அங்கு இரவு, பகல் பாராது செயற்பட்டான்.

கொட்டும் மழையும், கோடையின் கொளுத்தும் வெயிலும் அவனைக் கட்டிப்போட்டது கிடையாது. கொடிய சண்டைக் களங்களில் எல்லாம் எத்தனையோ துன்பங்களைச் சுமந்தவாறு, எத்தனையோ நெருக்கடிகளைச் சமாளித்தவாறு, எத்தனையோ ஆபத்துக்களை எதிர்கொண்டவாறு அபாரமான மனவுறுதியோடு போராடினான்.

தலைசிறந்த போர்த் தளபதி என்ற வகையில் நான் அவனை ஆழமாக நேசித்தேன். அவன் மீது அளவு கடந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தேன். அவன் அறிமுகமாகிய நாளிலிருந்து அவனுள் அபூர்வ போர்ப் பண்புகளும் போர்க் குணங்களும் இயற்கையாகவே நிறைந்து கிடப்பதை கண்டு கொண்டேன்.

ஆற்றல் மிக்க, ஆளுமை மிக்க இலட்சியப் போராளியாக அவனை வளர்த்தெடுத்தேன். அபாரமான துணிவும் அசுர வேகமும் சிறந்த தாக்குதல் உத்திகளும் நேர்த்தியாகப் படை நகர்த்தும் ஆற்றலும், கூட்டுக்குலையாத குறி தவறாத செயற்பாடுகளுமாக அவன் வெளிப்படுத்திய போர்ப் பண்புகள் எமது எதிரிக்கு அச்சத்தைக் கொடுத்தன.

அதேநேரம் எமது போராளிகளின் மனோதிடத்தையும் இலட்சிய உறுதியையும் மேலும் உரமாக்கின. எமது மக்களுக்குப் பெரும் வெற்றிகளைத் தேடித்தந்தன.

பிரிகேடியர் பால்ராஜ் எம்மை விட்டு எங்கும் போய்விடவில்லை. எமது தேசத்தின் சுதந்திர மூச்சாக எம்மையெல்லாம் உள்ளிருந்து இயக்குகின்ற இலட்சிய நெருப்பாக அவன் என்றும் எம்முள் எரிந்து கொண்டிருப்பான். (ச-5)

## இலங்கை...

நடாத்தியிருந்தனர்.

மேலும் இவ் வழக்கை வேகப்படுத்துவதற்கு இன்னும் பல போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகவும் இந் நடவடிக்கை ஒரு ஆரம்பமே என இவ்வமைப்பின் செயலாளர் அனா தெரிவித்துள்ளார். இதற்காக இவர் பிரபலமான பல வழக்கறிஞர்களுடன் சட்ட ஆலோசனைகளையும் நடத்தி வருகின்றார். (ச-5)

## அக்கரைப்...

நடத்தப்பட்ட இத் தாக்குதலில் படுகாயமடைந்த படைத் தரப்பைச் சேர்ந்தவர் அக்கரைப்பற்று மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

தாக்குதலையடுத்து அப் பகுதியில் பாரிய சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ச-5)

## ஈ.பி.டி.பி...

ணாரில் பெரும் பதற்றநிலை காணப்படுகின்றது.

படையினர் வீதியில் குவிக்கப்பட்டுள்ளனர். கடுமையான தேடுதல்கள் நடைபெற்று வருகின்றன. (ச-5)

## காத்தான்குடியில் வன்முறை...

காத்தான்குடியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினரும் ஆரையம்பதி பொறுப்பாளருமான சாந்தனும் அவரது பாதுகாவலரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்களின் ஆதிக்கம் நிறைந்த காத்தான்குடியில் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதனைத் தொடர்ந்து பிள்ளையான் குழுவின் ஆதிக்கம் நிறைந்த ஆரையம்பதியில் முஸ்லிம்கள் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் இடம்பெற்ற தாக்குதலில் மேலும் 7 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் வாள் வெட்டுக் காயங்களுக்கும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்கும் இலக்காகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மட்டக்களப்பு மருத்துவமனைக்கு நேற்று 5 சடலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 2 சடலங்கள் பிள்ளையான் குழு உறுப்பினர்களினது என்றும் ஏனைய மூன்று சடலங்களும் பொது மக்களினது என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் காயமடைந்த 10 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இச் சம்பவங்களையடுத்துக் காத்தான்குடியில் பெரும் பதற்றம் நிலவுகின்றது.

பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ளது. காத்தான்குடி பள்ளிவாசல்களூடாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

படையினரும் காவல்துறையினரும் வீதிகளில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் காத்தான்குடி உள்ளிட்ட மட்டக்களப்பு நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

வீதிகளில் கலகத்தடுப்புப் பொலிஸாரும் படையினரும் கவச வாகனங்கள் சகிதம் குவிக்கப்பட்டுள்ளனர். தனியாரின் போக்குவரத்து வாகனங்கள் படையினரின் பலத்த பாதுகாப்புடன் சென்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### முஸ்லிம் அரசியல்வாதிகள் காத்தான்குடிக்கு விரைவு

காத்தான்குடியில் கலவரம் வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதையடுத்து அங்கு முஸ்லிம் அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் சென்றுள்ளனர். முஸ்லிம் காங்கிரஸின் சில முக்கிய பிரமுகர்களும் அரசாங்கத்துடன் இணைந்துள்ள சில முக்கிய அரசியல் பிரமுகர்களுமே காத்தான்குடிக்குச் சென்றுள்ளனர்.

இன்று முஸ்லிம்களின் தொழுகை நாள். ஆதலால் தொழுகை முடிந்த பின்னர் பிள்ளையான் குழுவுக்கு எதிராக அங்குள்ள முஸ்லிம்கள் செயற்படக் கூடும் என்ற அச்சம் தற்போது அரச உயர் மட்டத்தில் எழுந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

### சமாதானக் குழு ஏற்படுத்த முயற்சி

இதேவேளை பிள்ளையான் குழுவுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகலைத் தணிக்கும் நோக்குடன் மட்டக்களப்பு-திருமலை மறை மாவட்டங்களுக் கான ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் தற்போது முக்கிய சந்திப்பு நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)


# திருமறைக் கலாமன்றம்

## நாடகப் பயிலகம்

## விண்ணப்பம் கோரல்

எமது மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2008 ஆம் ஆண்டுக்கான 15 ஆவது புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களுக்கும், நாடகமும், அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இப் பயிற்சி நெறி அமையும். பயில விரும்புவோர் யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 05.06.2008இற்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1157)

பிரதி இயக்குநர்,
திருமறைக் கலாமன்றம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.